# திருமறை ஆசான்

## புதிய ஏற்பாட்டுத் தூய மாத இதழ்

மலர் - 15 ஏப்ரல் 2002 இதழ் - 4



வெளியிடுவோர்

**கிறிஸ்துவின் சபை**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701,
தமிழ்நாடு, இந்தியா

© 04257-30030, 30382. E-mail: kangayamcofc@eth.net

## அருமையான வாய்ப்பு

பரிசுத்த ஆவியானவரின்பணி (170 பக்கங்கள்) மற்றும் புதிய ஏற்பாட்டு ஆராதனை (112 பக்கங்கள் ) ஆகிய நூல்கள், தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேத்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, உங்களுடைய உபயோக த்திற்கு ஆயத்தமாக உள்ளது.

பிரசங்கிகளுக்கும், வேத ஆசிரியர்களுக்கும், வேத மாணவர்களுக் கும், சபை அங்கத்தினர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று.

புத்தகம் முற்றிலும் இலவசம், ஆனால், தபால் செலவு உங்களைச் சார்ந்தது.அனுப்பப்படும் தொகை அளவுக்கு புத்தகங்கள் அனுப்பப் படும். அனுப்ப வேண்டிய குறைந்த பட்ச தொகை ரூ. 30/-

தொடர்பு முகவரி

தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்
தபால் பெட்டி எண் 27,
காங்கயம் - 638 701. இந்தியா

குறிப்பு : M.O. கூப்பனில் உங்கள் முகவரியைத் தெளிவாக எழுதவும்

## ஆசானின் அறிவுரையிலே...

1. ஆசிரியர் உரை 1
2. கிறிஸ்தவம் உங்களுக்கு என்ன செய்யவேண்டும் 10
3. ஏலகிரி வாருங்கள் 13
4. பெண்கள் பகுதி 14
5. வாலிபர் பகுதி 18
6. புலம்பல் ஒரு கண்ணோட்டம் 21
7. சிறுவர் பகுதி 22
8. சபை ஏழை எளியவர்களுக்கு... 24
9. யுத்தம் கர்த்தருடையது 29

# THIRUMARAI AASAAN

PUBLISHED BY CHURCH OF CHRIST

Editor
S. Rajanayagam

Honorary Editor
J.C.Choate

Dharapuram Road, kangayam - 638 701. Tamil Nadu, India.

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol.16 April - 2002 Issue - 4


ஆசிரியர் உரை

## 'எகிப்துக்கே....'

உனக்கே அவ்வளவு இருக்கும்போது, அவனுக்கே அவ்வளவு தெரியுமானால், அவர்களுக்கே அவ்வளவு முடியுமானால், அதற்கே அவ்வளவு முக்கியத்துவமானால், அதுவே அவ்வளவு பெறுமானால் என்று இப்படி நாம் ஒவ்வொருவரும் நம்முடைய வாழ்க்கையின் சில சூழ்நிலைகளில் பேசியிருப்போம் அல்லது பேசக் கேட்கவாவது செய்திருப்போம். இல்லையென்று யாரும் மறுக்கமுடியாது. இப்படி ஒரு கிறிஸ்தவன் பேசுவது கிறிஸ்தவ அறத்திற்கு உடன்பாடான காரியமா அல்லது கிறிஸ்தவ நெறிக்கு அப்பாறபட்டதா என்றெல்லாம் இங்கே நான் பேச வரவில்லை. மாறாக, எந்த சந்தர்ப்பங்களில் இப்படி ஒருவன் பேசக் கூடும் என்பதைக் கவனிக்க வேண்டுகிறேன். ஆம், இப்படிப் பேசக் கூடிய சந்தர்ப்பங்களை நாம் கூர்ந்து கவனித்தால், ஓர் உண்மை புலப்படமாற் போகாது. தனிப்பட்ட இருவரின் திறமையையோ அல்லது இரண்டு கூட்டத்தாருடைய பலத்தையோ அல்லது இரண்டு இடங்களின் முக்கியத்து வத்தையோ அல்லது இரண்டு பொருள்களின் சிறப்பையோ ஒப்பிட்டுப் பார்த்து, ஒன்றுக்கொன்று எவ்விதத்திலும் சம்பந்தமில்லாததாகவும் அல்லது மிகப் பெரிய வேறுபாடு கொண்டதாகவும் இருக்கும்போது, இப்படிப்பட்ட தொனியில் பேசப்படும். என்னுடைய இக்கருத்தை நீங்கள் ஓரளவுக்கேனும் ஒத்துக்கொள் வீர்கள் என நம்புகிறேன்.

இம்மாதத்திற்கான நமது தலைப்பையும், மேற்சொன்ன எனது கருத்தையும் வைத்து, இந்நேரம் நான் எங்கே வரப்போகிறேன் என்ற ஒரு முடிவுக்கு வந்திருப்பீர்கள். அப்படித்தானே!

சரி,இம்மாத தலைப்பை அலங்கரிக்கும் எகிப்தை, நான் எதனுடன் ஒப்பிடப்போகிறேன் என்பதை வெளிப்படுத்துவதற்கு முன், நாம் பார்க்க உள்ள எகிப்து பற்றி சில காரியங்களைத் தெரிந்து கொள்வோம்.

பாலைவனப் பரப்பை பெரும் நிலப்பகுதியாகக் கொண்டு, இன்றைய உலகில் இருக்கும் 200க்கும் மேற்பட்ட நாடுகளில், தானும் ஒன்று என்றளவில்,

அந்த நாட்களில் பிரமிடுகள் தவிர, வேறெந்தச் சிறப்பையும், முக்கியத்து வத்தையும் பெற்றிராத எகிப்தல்ல நமது எகிப்து. அது, உலக வரலாற்றில் பல நூற்றாண்டுகள் முத்திரை பதித்த பண்டைய எகிப்து. பழைய ஏற்பாட்டுச் சரித்திரத்தோடு, மிக நெருங்கிய தொடர்பு கொண்ட எகிப்து. இந்த எகிப்தைத் தவிர்த்து, தேவனுடைய திட்டத்தைப் புரிந்து கொள்ளவே முடியாது என்று சொல்லுமளவு முக்கியத்துவம் வாய்ந்த எகிப்து. பண்டைய காலந்தொட்டு, பார்வோன்களின் பல பரம்பரைகள் கண்டு, அரசியல் ரீதியாகக் கோலோச்சி, நாகரீக ரீதியாக வழிகாட்டி, கலாச்சார ரீதியாக முன் நடந்து, புகழ் ஏணியின் உச்சியில் குடியிருந்த எகிப்து. இப்படிப்பட்ட எகிப்துதான், முற்பிதாக்களில் மூன்றாமவரான யாக்கோபின் பல வருண அங்கி மகனான யோசேப்பின் எகிப்து. அக்கால கட்டம், பார்வோனின் பரம்பரையில், 15-வது பார்வோன் என்று நம்பப்படுகிற ராஜாவின் செல்வச் செழிப்பு மிக்க எகிப்து. இங்கே, நான் வர்ணித்த அந்த எகிப்து இவ்வளவு சிறப்புகளைக் கொண்டதாக இருந்தாலும், அது பாவ மனிதனால் ஆளுகை செய்யப்பட்ட பூமியின் நாடுகளில் ஒன்று என்பதையும், ஒரு கட்டத்தில் தன் பொலிவை இழந்து, மாட்சிமையில் மங்கி, எல்லையில் சிறுத்து, மரியாதையை இழந்து போயிற்றென்பது கண்டிப்பாக நினைவில் கெள்ளவேண்டிய ஒன்று.

நாம் கண்ட அந்த கம்பீரமான எகிப்தில், சரி பிழைத்துப் போகிறான் என இருபது வெள்ளிக்காசுக்கு அடிமையாக விற்கப்பட்ட யோசேப்பு, நம் கர்த்தரின் தாங்கும் கரங்களால் ஏந்திச் செல்லப்பட்டு, அரியணையில் அமர்த்தப்படுகிறான். எகிப்தின் சிங்காசனம் தவிர, ஏனைய அனைத்தும் அவனது அதிகாரத்தின் கீழ். அவனுடைய செல்வாக்கிற்கு நிகரானவன் ஒருவனும் அங்கில்லை. அப்பொழுது ஏற்பட்ட கொடிய பஞ்சம் அவனைப் பார்வோனிலும் பிரபலமானவனாக மாற்றிவிட்டது. எகிப்தின் எல்லைக்குள் மாத்திரம் கனம் பெற்றிருந்த பார்வோனைக் காட்டிலும், இவன் கீர்த்தியின் எல்லை மிகவும் விசாலமா கியிருந்தது. அது எப்படி என்று கேட்கிறீர்களா? இதோ வசன ஆதாரம். "சகல தேசங்களிலும் பஞ்சம் கொடிதாயிருந்தபடியால், சகல தேசத்தார்களும், யோசேப்பினிடத்தில் தானியம் கொள்ளும்படி எகிப்துக்கு வந்தார்கள்" (ஆதி. 41:57). ஆம், பார்வோனிடத்தில் அவர்கள் வரவில்லை. யோசேப்பினிடத்தில் தான் வந்தார்கள்.

அன்றைய உலகிற்கு ஏற்பட்டது கடும் வறட்சி. அந்த வறட்சி பெற்றெடுத்த சவலைப் பிள்ளை பஞ்சம். பஞ்சத்தின் உடன்பிறப்பு பட்டினி; இம்மூன்றும் அக் காலத்தில், எத்தேசத்தையும் விட்டுவைக்கவில்லை. எத்தேசம் என்று குறிப்பிடு வதற்குக் காரணம், வாக்குத்தத்த பூமியாகிய கானானும் இதற்கு விதிவிலக்காக இருக்கவில்லையென்பதே. பஞ்சத்தின் தன்மையை வேதாகமம் கொடியது என க் கூறுகிறது. (ஆதி 41:57). பஞ்சத்தைப் பற்றி பேசுவதும், எழுதுவதும் சுலபம். ஆனால், அதை அனுபவிப்பது கடினம். அதன் கோர முகம் அவ்வளவு கொடியது. இப்படிப்பட்ட பஞ்சம், யாக்கோபின் குடும்பத்தை சாவை எதிர்கொள்ளும்படி செய்தது. (42: 1-3).

பஞ்சம், பஞ்சம் என்று பூச்சக்கரம் முழுவதும் புலம்பிக்கொண்டிருந்தாலும் (42:57)தேவனுக்கு பயந்து வாழ்ந்த யோசேப்பினிமித்தம் எகிப்து மாத்திரம் தப்பித்து கொண்டது. அங்கும் மழைத்தாழ்ச்சியினால் வறட்சி நிலவியது. ஆயினும் பஞ்சம் கடுமையாக இல்லை. கடுமை கொஞ்சம் தலைகாட்டிய போது, யோசேப்பின் சாமர்த்தியத்தால் சேமிப்புக் கிடங்கிலிருந்த தானியம் பண்டமாற்று முறையில் விநியோகிப்பட்டு நெருக்கடி தீர்க்கப்பட்டது. (47:17).

எகிப்தில் தானியம் கிடைக்கிறதென்ற செய்தியைக் கேள்விப்பட்ட யாக்கோபு, பென்யமீன் தவிர்த்த ஏனைய பத்துப்பேரையும், தானியங் கொள்ளும்படி பணத்துடன் அனுப்பிவைக்கிறான். அவர்களனைவரும் அதிபதி யோசேப்பைக் கண்ட மாத்திரத்தில் விழுந்து வணங்கினார்கள். (42: 6) அடுத்த பயணத்தில், வேறு வழியில்லாமல், பென்யமீனையும் அனுப்பினபோது, 11 பேரும் யோசேப்பை முகங்குப்புறத் தரையிலே விழுந்து வணங்கினார்கள். (43:16,26). இவர்களை அடையாளம் கண்டு கொண்ட யோசேப்புக்கு, இவர்களின் வணங்குதல், தன்னுடைய இளமைக்கால சொப்பனத்தை நினைவுபடுத்தியது. அவர்களைச் சகோதரர்கள் என்று கண்டு கொண்டும், ஏதும் அறியாதவன் போல அவர்களைக் கடினமாய் நடத்தினான் (42:16) தன்னுடைய பிள்ளைப் பருவம் முதல் தேவனுக்குப் பயந்து வாழ்ந்த யோசேப்பு, தன் இளமைக்காலத்திலேயே, சகோதரர்களின் நலன் அறிய நெடுந்தூரம் நடைபயணம் மேற்கெண்ட யோசேப்பு, அவர்களைக் கண்ட மாத்திரத்தில் அவர்களை ஏற்றுக்கொள் ளாமல், ஆரத் தழுவி, தன்னுடைய அன்பை வெளிப்படுத்தாமல், ஏன் இப்படிக் கடுமையாக நடத்தினான் என்பது, மேலெழுந்த வாரியாகப் பார்க்கும்போது விளங்காத ஒன்றாகவே படுகிறது. ஆயினும், குமுறிக்கொப்பளிக்கும் தன் உணர்வுகளையும், சிறகடித்துப் பறந்த தன் எண்ணங்களையும், அவன் வெகுபாடுபட்டுச் சிறைபிடித்து, அவர்களைத் தொடர்ந்து நடத்தின விதத்தைக் கவனித்தால், அதற்கு ஒரு மேலான நோக்கம் இருந்திருக்க வேண்டுமென்றே தெரிகிறது.

தன் சகோதரர்களைப் பஞ்சமும்,பட்டினிச் சாவும் இல்லாத எகிப்திற்குள் அனுமதிப்பதற்கு , தன்னுடைய பாதுகாப்பில் அவர்களைத் தங்க வைப்பதற்கு , தன் தயவால் அவர்கள் வாழ்ந்து சுகித்திருப்பதற்கு, அத்தேசத்தில் அவர்களுக்கென்று ஒரு இடத்தை ஒதுக்குவதற்கு, அவர்கள் ***தகுதியுடையவர்களாக*** இருக்கிறார்களா அல்லது தன்னுடைய தகப்பன் வீட்டிலும், தோத்தானிலும் தான் கண்ட அதே சகோதரர்களாக இருக்கிறார்களா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்பியுள்ளான். ஆகவே, அவர்களைச் சோதனை என்னும் குகைக்குள் செலுத்தி புடமிடுகிறான்.

தேவனுக்குப் பயந்த இந்த யோசேப்பு, தன் உடன் பிறந்த சகோதரர்களை, எகிப்திலே ஏற்றுக்கொள்வதற்கு முன், அவர்களைச் சோதித்து நடத்தின முறையை நாம் கவனித்தால், நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கைக்கு, அவைகளிலிருந்து சில பாடங்களைக் கற்றுக்கொள்ள முடியும் என்பது நன்றாகவே விளங்கும். ஆகவே, அப்பாடங்கள் என்னவென்று இப்பொழுது கவனிப்போம்.

## I. அவர்களின் உண்மை சோதிக்கப்பட்டது

யோசேப்பு, தன் சகோதரர்களை, தான் இருக்கும் எகிப்தில் ஏற்றுக் கொள்வதற்கு முன், முதலாவது, அவர்களின் உண்மையைச் சோதித்தான்.

தன்னுடைய பிள்ளைப் பருவம் முதல், தான் இஸ்மவேலர்களி டத்தில் விற்கப்பட்ட தனது பதினேழு வய்து வரை, தன்னுடைய சகோதரர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை அவன் அறிந்திருந்தான். அவர்கள் துன்மார்க்கத் தனமானவர்களென்பதும், உண்மையில்லாதவர்களென்பதும் அவன் அறிந்த ஒன்றுதான் (ஆதி. 37:2). ஆனால் வருடங்கள் 22 உருண்டோடிவிட்ட பிறகு இன்னும் அதே உண்மையற்ற தன்மை நீடிக்கிறதா அல்லது அதற்கு ஒரு முடிவு வந்து விட்டதா என்று சோதித்துப் பார்க்க முடிவெடுத்தான். இன்னும் குறிப்பாக, தன்னை விலையாகக் கொடுத்த பிறகாகிலும், அவர்கள் மாறியிருக்கிறார்களா என்று அறிய விரும்பினான்.

ஆகவே, அவர்கள் தானியங்கொள்ள வந்தபோது, தானியத்தோடு சேர்த்து அவர்கள் கொண்டு வந்த பணத்தையும் போட்டனுப்பும்படி உத்திரவிடுகிறான். கொண்டு சென்ற பணம் திரும்ப வந்து விட்டதை, அவனுடைய சகோதரர்கள் இரண்டு கட்டமாக அவர்கள் தெரிந்து கொண்டு (42: 27,35) பயந்து நடுங்குகின்றனர். பிறகு மீண்டும் தானியங்கொள்ள வந்தபோது, ஏற்கனவே வந்து விட்ட பணத்தோடு, அப்போதைய தேவைக்கும் பணம் கொண்டு வந்ததோடு, எங்களை அறியாம லேயே அந்த தவறு நடந்து விட்டதென்று வினயத்தோடு எடுத்துரைத்து, தவறுக்கு மன்னியுங்கள் என்ற பாணியில் நடந்து கொள்கின்றனர்.(43:21)

கிட்டத்தட்ட 22 ஆண்டுகளுக்கு முன்பாக, யோசேப்பு கண்ட சகோதரர்கள் அல்ல நாங்கள் என்பதை இப்படித் தங்கள் செயல் மூலம் நிரூபித்துக் காட்டினர். யோசேப்பை விலையாகக் கொடுத்தற்குப் பிறகு, நாங்கள் மாறி விட்டோம் என்பதைத் தெள்ளத் தெளிவாகத் தெரிவித்தனர். யோசேப்பை விலையாகக் கொடுத்தபின் அவர்கள் மாறியிருக்க வாய்ப்புண்டு என்பதை நான் ஆதாரமில்லாமல் குறிப்பிடவில்லையென்பதை நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள். யோசேப்பு அவர்களைக் காவலிலிருந்து விடுவித்து, உங்கள் காரியம் மெய் யென்று விளங்க, உங்கள் இளைய சகோதரனைக் கூட்டி வாருங்கள் என்று சொன்னபோது, ஒருவரை ஒருவர் பார்த்து *"யோசேப்பு நம்மைக் கெஞ்சிக் கேட்டும் அவன் மன வியாகுலத்தை நாம் கண்டுகொள்ளவில்லையே"* என்று தங்களுக்குள் சொல்லி கொண்டனர். (42:20,21)ஆகையால், துன்பம் வந்த பொழு தெல்லாம், அவர்கள் யோசேப்பை நினைத்திருக்க வேண்டுமென்று இதிலிருந்து தெரிகிறது. அவர்களின் உண்மையற்ற வாழ்வு, யோசேப்போடு ஒரு முடிவுக்கு வந்திருக்கலாம். எப்படியோ, அவர்கள் உண்மை சோதிக்கப்பட்ட போது, தாங்கள் தேறியிருப்பதை எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபித்துக் காட்டினர்.

சராசரி மனிதனாகிய யோசேப்பு இருந்த இடமாகிய எகிப்துக்குள், இன்னும் இப்பொழுது கிட்டத்தட்ட இருந்த இடம் தெரியமால் போன **எகிப்துக்குள் பிரவேசிப்பதற்கே,** உண்மை சோதிக்கப்படுவது அவசியமானால், சர்வ வல்லமையுள்ள பரிசுத்த தேவன் வாசம் செய்யும், என்றென்றும் நிலைத்து நிற்கும் நித்திய வீடாகிய **பரலோகில் பிரவேசிப்பதற்கு** நம்முடைய உண்மை சோதிக்கப்பட வேண்டியது எவ்வளவு அவசியம் என்று எண்ணிப்பாருங்கள்!

அன்பான தேவனுடைய பிள்ளைகளே, நம்முடைய வாழ்வில் உண்மை எந்தளவு உள்ளது என்று நிதானித்துப் பார்ப்போம். நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையில் நாம் உண்மையாக உள்ளோமா? நம்முடைய குடும்ப வாழ்வில் நம்முடைய உண்மை எந்தளவில் உள்ளது? கணவன் மனைவிக்கும், மனைவி கணவனுக்கும் உண்மையாக இருக்கிறோமா? பிள்ளைகள் பெற்றோருக்கும், பெற்றோர் பிள்ளைகளுக்கும் உண்மையாக இருக்கிறார்களா? அதற்கும் மேலாக நம்முடைய வாழ்வில், மணவாளனாகிய இயேசுக் கிறிஸ்து, மணவாட்டியாகிய சபையை நேசித்து உண்மையாக இருப்பது போல, நாம் ஒவ்வொருவரும், கிறிஸ்துவின் சபைக்கு உண்மையாக இருக்கிறோமா? சொல்லுங்கள். இன்னும் பரலோகத்தின் தேவன் பரிசுத்த ஆவியானவரைக் கொண்டு கொடுத்த தேவ வசனங்களுக்கு நாம் உண்மையாக இருக்கிறாமோ? வேத வசனங்களின் உபதேசப்படி நம்முடைய ஆன்மீக வாழ்வு இருக்கிறதா அல்லது மனித கோட்பாடுகளின்படி இருக்கிறதா? சத்தியத்திற்கு ஒப்புக்கொடுத்து வாழ்ந்து கொண்டிருக்கிறோமா அல்லது வெகுஜன அபிப்பிராயத்தின்படி நமது ஆவிக்குரிய வாழ்வை நடத்திக் கொண்டுள்ளோமா? உண்மைச் சத்தியம் தான் நம்மை விடுதலையாக்கும். (யோவான் 8:32) உண்மைச் சபைதான், நம்மை, தேவன் இருக்கும் பரலோகத்திற்கு அழைத்துச் செல்லும். வேறு குறுக்கு வழி கிடையவே கிடையாது.

எகிப்தில் பிரவேசிப்பதற்கே உண்மை அவசியமானால், பரலோகத்தில் பிரவேசிப்பதற்கு, அது எவ்வளவு அத்தியாவசியம் என்பதை எண்ணிப் பாருங்கள். ஆகையால், நாம் எல்லாவற்றிலும், குறிப்பாக ஆவிக்குரிய வாழ்வில், வசனங்களின் உபதேசத்தில் உண்மையுள்ளவர்களாகவே இருப்போம்.

## II. அவர்களின் பொறாமை குணம் சோதிக்கப்பட்டது

யோசேப்பு தன் சகோதரர்களை, தான் இருக்கும் எகிப்தில் ஏற்றுக் கொள்வதற்கு முன், இரண்டாவதாக அவர்களின் பொறாமை குணத்தைச் சோதித்தான்.

பொறாமை குணத்தின் பாதிப்பை யோசேப்பைக் காட்டிலும் அதிகமாக வேறு எந்த மனிதனாவது அனுபவித்திருப்பானா என்று யோசித்தால், பதில், கிட்டத்தட்ட இருக்க முடியாது என்றுதான் வரும். ஒரு வேளை, ஆதியிலே நடந்த

முதல் கொலையை பொறாமையின் விளைவால் தானே என்று சொன்னாலும், அது சடிதியாய் நடந்த ஒரு செயலாகையால், ஆபேல், பொறாமையின் விளைவை தன் வாழ்க்கையில் அனுபவிக்கவில்லை. ஆனால்,யோசேப்பு தன் இளம் பிராயத்தி லேயே அதை அணு, அணுவாக அனுபவித்தான். அதன் பாதிப்பு அவன் அரியணை ஏறியபோதும் விட்டபாடில்லை. ஆகவே, அவர்கள் உண்மை நிரூபிக்கப்பட்டாலும், இக்காரியத்தில் அவர்கள் எந்தளவு தேறியிருக்கிறார்கள் என்று அறிந்து கொள்ள முடிவு செய்தான். குறிப்பாக, ராகேலின் குமாரனை அவர்கள் இன்னமும் வெறுக்கிறார்களா என்பதை அறிந்து கொள்ள ஆர்வம் காட்டினான்.

தங்கள் தகப்பனாகிய யாக்கோபிடம் கெஞ்சி, மன்றாடி, யூதாவின் உத்திரவாதத்தின் பேரில் இளையவன் பென்யமீனை எகிப்துக்கு இரண்டாம் தரம் வந்தபோது அழைத்து வந்தனர். தன் தாயின் மகனாகிய பென்யமீன் இவன் தான் என அறிந்த மாத்திரத்தில் அவன் உள்ளம் பொங்குகிறது. உணர்வுகளை அடக்க முடியாமல், அறைக்குள் சென்று அழுது முடித்து, வெளியே வந்து அவர்களுக்கு போஜனம் வையுங்கள் என்றான். (42: 30,31) வயதின்படி வரிசையாக அமர வைக்கப்பட்டதைக் கண்டு அவர்கள் ஆச்சரியமடைந்தார்கள். பிறகு, ஆகாரம் பங்கிட்டு அனுப்பப்பட்டபோது, தன் தாயின் மகனாகிய பென்யமீனுக்கு 5 மடங்கு கொடுத்தான். அவர்களனைவருக்கும் சிறந்த போஜனம் வயிறாரவே கொடுக்கப் பட்டி ருக்கும். அங்கே பென்யமீனுக்கு ஐந்து மடங்கு அவசியமில்லை. ஐந்து மடங்கு போஜனத்தை அவனால் சாப்பிட்டிருக்கவும் முடியாது. அவனால் சாப்பிட முடியாதென்பது யோசேப்புக்கும் தெரியும். ஆயினும் ஒரு நோக்கத்தோடு அனுப்புகிறான். அதன் மூலம் அவர்களின் பொறாமை குணத்தை ஆராய்ந்தான். ஆனால், யாக்கோபின் குமாரர்கள் இச்சோதனையிலும் வென்றார்கள். " அவர்கள் பானம் பண்ணி, அவனுடனே சந்தோஷமா யிருந்தார்கள்" (43:34) என்று வசனம் சொல்லுகிறது. இருப்பினும் அவன், இன்னும் தன்னை வெளிப்படுத்தவில்லை.

அன்பானவர்களே, யோசேப்பு இருந்த எகிப்துக்குள் எட்டி வைப்பதற்கே பொறாமை குணம் துப்புரவாக இருக்கக் கூடாதென்றால், இக்கொடுங் குணத்தோடு, நாம் தேவன் இருக்கும், பரலோகத்தில் பிரவேசிக்க முடியுமா? முடியாது. முடியவே முடியாது.

இப்பொறாமை குணம் குறித்து ஞானி சாலமோன் "எலும்புருக்கி" என்று (நீதி. 14:36) சொல்லுகிறான். பொறுமையின் சிகரமான யோபு, "பொறாமை புத்தியில்லாதவனை அதம் பண்ணும்" என்று கூறுகிறான் (யோபு. 5:2) பொறாமை, எந்த மனிதனுக்கும், குறிப்பாக எந்தவொரு கிறிஸ்தவனுக்கும் எந்நன்மையையும் செய்யாது. இருப்பினும் இக்குணம் எல்லோரையும் ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கிறது. என்னிடம் இல்லையென்று சொல்லுங்கள் பார்க்கலாம்!

அருமையானவர்களே, தங்களைக் கொடுமையான முறையில் கட்டிப் போட்டிருந்த பொறாமையின் விலங்கை, யோசேப்பு விற்கப்பட்டதற்குப் பிறகு யாக்கோபின் குமாரர் தகர்த்தெறிந்தனர். அக்குணம், இப்பொழுது தங்களுக் கில்லையென்று செயல் மூலம் நிருபித்தும் காட்டினர். ஆனால், இயேசுவுக்கு சகோதரர்களாய் இருக்கும்படியான ( எபி.2:11 ) பாக்கியம் பெற்ற கிறிஸ்தவர்கள், அவரை விலையாகக் கொடுத்த பிறகும், இந்த எலும்புருக்கி நோயிலிருந்து விடுபடமுடியாமல் தவியாய்த் தவித்துக் கொண்டிருப்பது எவ்வளவு கேவலமான தென்று எண்ணிப் பாருங்கள்.

இன்றைக்கு எத்தனைக் கிறிஸ்தவ ஸ்தாபனங்கள், இக்கொடிய குணத்தால் சீரழிந்து கொண்டிருக்கிறது என்று சிந்தித்துப்பாருங்கள். கிறிஸ்தவ ஸ்தாபனங்கள் தான் எப்படியோ போகட்டும் என்றால், இது சபையையும் விட்டு வைக்கவில்லை. சத்தியத்திற்குத் தூணும் ஆதாரமுமாக இருக்க வேண்டிய சபைகள், பொறாமை குணத்தால், சாத்தானின் கைக்கூலிகளாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. யாக்கோபின் குமாரர்களை வாய் கூசாமல் குற்றம் சுமத்தும் கிறிஸ்தவ சமுதாயமே! நாம் எப்பொழுது இதிலிருந்து விடுபடப்போகிறோம்? இன்னும் எத்தனை காலம்? யோசேப்பைக் குழியில் தள்ளிய கையோடு தங்கள் பொறாமை குணத்தையும் அவர்கள் குழியில் தள்ளி அதற்கு அவர்கள் சமாதி கட்டியிருக்கும் போது, தேவனுடைய பிள்ளைகளென்று நம்மை அழைத்துக்கொள்ள விரும்பும் நாம், இயேசுவைச் சிலுவையில் அறையக் கொடுத்த பின்னரும் அக்குணத்தை உடும்புப் பிடியாய் பிடித்துக் கொண்டிருப்பது, நியாயமாகுமா?

இக்குணத்திற்கு, இப்பொழுதே விடை கொடுக்காவிட்டால், தேவன் வாசம் செய்யும் பரலோகம் நமக்கு சற்றும் சம்பந்தமில்லாத இடமாக மாறிவிடும். ஆகவே, பொறாமை குணத்திலிருந்து உடனடியாக விடுதலை பெறுவோம்.

## III.அவர்களின் சகோதர சிநேகம் சோதிக்கப்பட்டது

யோசேப்பு, தன் சகோதரர்களைத் தான் இருக்கும் எகிப்தில் ஏற்றுக் கொள்வதற்குமுன், மூன்றாவதாக, அவர்களின் ஒற்றுமையை, சகோதர சிநேகத்தை சோதித்தான்.

முதல் இரண்டு சோதனையில் அவர்கள் அபார வெற்றி பெற்றிருந்தாலும், இதுவும் அவர்களுக்கு அவசியம் என்று கருதி சோதிக்கிறான். ஆம், இரண்டாம் தரம் அவர்கள் திரும்பிச் சென்ற போது, அவனவன் பையிலே அவனவன் பணத்தையும் பென்யமீன் பையிலே பணத்தோடு,யோசேப்பின் வெள்ளிப் பான பாத்திரத் தையும் போட்டுவிடும்படி வேலைக்காரர்களுக்குக் கட்டளை கொடுத்தான் (44:1,2) பிறகு, அவர்கள் புறப்பட்டு வெகுதூரம் போவதற்கு முன்பாக,விரட்டிச்சென்று, ஏன் இப்படிச் செய்தீர்கள் என்று அவர்களை பார்த்துக் கேட்கும்படி செய்தான். இருதயத்தைக் கொஞ்சம் கூட இளக்காமல், அவர்கள் மீது

திருட்டுப்பட்டம் சுமத்துகிறான். பிறகு நடந்த தேடுதல் வேட்டையில் அந்த வெள்ளிப்பாத்திரம், பென்யமீன் சாக்கிலே கண்டுபிடிக்கப்பட்டபோது, என்னசெய்வதென்று தெரியாமல் ஆளாளுக்குத் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டார் கள். (44:13)

பிறகு, யோசேப்புக்கு முன்பாக, அவர்கள் நிறுத்தப்பட்டபோது, "என் ஆண்டவனாகிய உம்மிடத்தில் நாங்கள் என்ன சொல்லுவோம்? என்னத்தைப் பேசுவோம்? எதினாலே எங்கள் நீதியை விளங்கப் பண்ணுவோம்? உம்முடைய அடியாரின் அக்கிரமத்தை தேவன் விளங்கப் பண்ணினார், பாத்திரத்தை வைத்திருக்கிறவனும், **நாங்களும் என் ஆண்டவனுக்கு அடிமைகள்"** என்றனர் (44:16) அதற்கு யோசேப்பு, இல்லையில்லை, அப்படிப்பட்ட செய்கை எனக்குத் தூரமாயிருப்பதாக, எவன் வசத்தில் பாத்திரம் கண்டுபிடிக்கப்பட்டதோ **அவனே எனக்கு அடிமை, நீங்களோ சமாதானத்தோடு உங்கள் தகப்பனிடத்திற்கு போங்கள்** என்றான்" (44:17) அப்பொழுது உத்திரவாதியாகிய யூதா, "ஒரு வார்த்தை" சொல்லுகிறேன் என்று ஆரம்பித்து, ஒரு குட்டிப் பிரசங்கத்தையே செய்து, பென்யமீனுக்குப் பதில் நானே அடிமையாயிருக்கிறேன் என்று சொல்லி, இறுதியில், "இளையவனை விட்டு, எப்படி என் தகப்பனிடத்திற்குப் போவேன்? போனால் என் தகப்பனுக்கு நேரிடும் தீங்கை நான் எப்படிக் காண்பேன் என்றான்".

அதற்கு மேல் தன்னை அடக்கிக் கொள்ள முடியாத யோசேப்பு, எல்லோரையும் வெளியே போகச் சொல்லி, சத்தமிட்டு அழுது, தன்னை தன் சகோதரர்களுக்கு வெளிப்படுத்தினான். அங்கே யோசேப்பின் அழுகை, ஓர் அபயக்குரல் அல்ல. அது, அங்கீகார தொனி, அப்பொழுதிலிருந்து அவர்களை, எகிப்தில் குடியேற்றுவதற்கான பணி ஏக தடபுடலாக நடந்தது.

எல்லோருமாகச் சேர்ந்து தன்னைக் குழியில் தள்ளியது போல், தன் தாயின் இன்னொரு குமாரனாகிய பென்யமீனை, இது தான் சாக்கு என்று சொல்லி, தாங்கள் தப்பித்தால் போதுமென்று ஓடப் பார்க்கிறார்களா அல்லது இவனுக்காகப் பிரயாசை எடுக்கப் போகிறார்களா என்று சோதித்தான். இச்சோதனையிலும் அவர்கள் அபார வெற்றி பெற்றார்கள். **பென்யமீனுக்காக நாங்கள் எல்லோரும் அடிமைகள் என்றார்கள்.** அப்பொழுது, எப்படியிருந்திருக்கும் யோசேப்புக்கு? ஈவிரக்கமில்லாமல், தன்னை அடிமையாக ஒரு காலத்தில் விற்ற இவர்களா இவனுக்காக அடிமைகளாக இருக்க முன் வருகிறார்கள் என்று தன் கண்களைத் தானே நம்பமுடியாமல் ஏற இறங்கப் பார்த்திருப்பான், அப்படித்தானே. எப்படியோ, தான் இருக்கும் எகிப்தில் குடியேற அவர்களுக்கு சகோதர சிநேகம் அவசியம் என்று நினைத்தான். சோதித்தான். பிறகு சோதனை களின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ள முடிவு செய்தான்.

எனதருமை சகோதரனே, சகோதரியே, ஒரு சாதாரண தேசமாகிய எகிப்துக்குள் அடியெடுத்து வைப்பதற்கே, சகோதர சிநேகம் அவசியமானால், சராசரி மனிதனாகிய யோசேப்பு இருக்கும் இடத்தில் குடியேறவே சகோதர சிநேகம் அவசியமானால், நித்திய நாடாகிய பரலோகத்தில் பிரவேசிக்க, பரிசுத்தமும், நீதியும் நிறைந்த சர்வ வல்லவர் இருக்கும் நகரத்தில், நித்திய காலமாய் வாழ்வதற்கு, சகோதர சிநேகத்தில் எந்தளவு சிறந்து விளங்க வேண்டுமென்று எண்ணிப் பாருங்களேன்.


சகோதர அன்பு கிறிஸ்தவர்களுக்குள்ளாக இருக்குமானால், கிறிஸ்துவின் சபைகளில் ஒரு போதும் பிரச்சனையே எழாது. பிரச்சனைகள் இல்லாத பட்சத்தில், சபைகள் ஆவியிலும், எண்ணிக்கையிலும் வெகுவாக வளர்ந்து, அவைகள் இருக்குமிடங்களில் தேவனுக்கு மகிமை சேர்க்கும். ஆகையால், நம்முடைய தேவனால், போதிக்கப்பட்டபடி (1.தெச.4:9) நம்முடைய தேவனால் கட்டளையிட்டப்படி (ரோமர் 12:10)சகோதர சிநேகத்திலே நிலைத்திருந்து (எபி.13:1) பரம கானானுக்குள் பிரவேசிக்கும் பாக்கியம் பெறுவோம்.

இப்பொழுது நாம் பார்த்தபடி, உண்மையும், பொறாமை அற்ற தன்மையும், சகோதர சிநேகமும் மாத்திரம் இருந்தால் போதும், பரலோகம் போய்விட முடியுமென்று நான் சொல்வதாக நினைத்துக்கொள்ளாதீர்கள். அப்படியில்லை. யோசேப்பு, அவர்களிடம் அத்தவறுகளைக் கண்டதால், அவைகளிலிருந்து அவர்கள் விடுபட்டிருக்கிறார்களா என்று சோதித்தான். ஆம், என்று ஊர்ஜிதமான போதே, தான் இருக்குமிடத்தில் அவர்களையும் ஏற்றுக்கொண்டான்.

அதுபோலத்தான், நம்முடைய பாவங்கள் அனைத்தையும் கண்டறியும் தேவன், அவைகளிலிருந்து நாம் தேறியிருக்கிறோமா என்று நம்மை சோதித்து, தேறியிருந்தால், அவர் இருக்குமிடத்தில் நம்மைச் சேர்த்துக்கொள்வார். ஆகையால் வேதம் விவரிக்கும் *எல்லாக் குணங்களிலும் தேறி, திவ்விய சுபாவத்திற்குப் பங்குள்ளவர்களாக மாறி,* நம்முடைய தேவன் வாசம் செய்யும் பரலோகம் சென்றடைவோம்.

ஒப்பிடமுடியாத அப்பாக்கியத்தைப் பெற, பரலோகத்தின் தேவன் நமக்கு அனுக்கிரகம் செய்வராக! ஆமென்!

**செ. ராஜநாயகம்.**



# கிறிஸ்தவம் உங்களுக்கு என்ன செய்யவேண்டும்

மற்ற எல்லாவற்றையும் காட்டிலும், கிறிஸ்தவம் உலகத்திற்கென ஒரு காரியத்தில் மிக அதிகமாக செய்துள்ளது. அதை ஏற்றுக் கொள்ளாதவர்களும் கூட, இதினால் கவரப்பட்டுள்ளவர். ஒரு மனிதன் மீது கிறிஸ்தவம் கொண்டுள்ள செல்வாக்கு, அவன் எந்த அளவுக்கு கெட்டவனாக இருந்தாலோ,அந்த அளவுக்கு அவன் நல்லவனாக மாற ஏதுவாக்குகிறது. கிறிஸ்தவம் அறிமுகப்படுத்தபடா திருந்திருந்தால்,உலகம் எந்நிலையில் இருந்திருக்ககூடும் என்பதை சற்று கற்பனை செய்து பாருங்கள். நாம் வாழவே தகுதியற்ற, மிக பயங்கரமான இடமாகத்தான் இவ்வுலகம் இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

மனித வர்க்கத்திற்கு பொதுவாக கிறிஸ்தவம் ஆற்றிய பணி, இயல்பில் தனித்துவம் வாய்ந்துள்ளது. எனவே அதில் மிகப்பெரிய ஆதாயத்தை நாம் அடையவேண்டுமாயின், அதை ஏற்றுக்கொள்வதற்கு நாம் முற்பட வேண்டும். கிறிஸ்தவத்தின் காரணரான இயேசு கிறிஸ்துவின் உபதேசங்களை பின்பற்று வதின் மூலம், அதின் அடிப்படைக் கோட்பாடுகள் நமது வாழ்வில் நுழைந்து, ஆசீர்வாதமாகி, நம்மை கனி கொடுக்கச் செய்யும்.

ஏதோ ஒரு மார்க்க அமைப்பைப் பின்பற்றுவதன் மூலமோ, மனதளவில் கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொள்வதன் மூலமோ, சொல்லிமுடியாத ஆசீர்வாதங் களையும், பிரதிபலன்களையும் பெற இயலும் என்ற ரீதியில், சிலர் நம்பும்படி வழிநடத்தப்படுகின்றனர். தாங்கள் எதையுமே செய்யாமல், தங்களின் அனைத்து பிரச்சினைகளும் உடனடியாக தீர்க்கப்பட்டு தாங்கள் ஐசுவரியவான்களாக மாறுகின்ற (கற்பனை) காட்சியை பெற்றுக் கொள்கின்றனர். இவைகள் அனை த்தும், மாம்சக்கண்ணோட்டத்தில் மாம்சப் பிரகாரமான ஆதாயத்திற்கென செய்யப்படுகிறதேயன்றி, ஆவிக்குரிய கண்ணோட்டத்தில் வருவதில்லை. இப்படிப்பட்டவர்கள் தான், தங்களின் கற்பனைக் கனவுகள் நனவாகாதபடியால், வெகு சுலபத்தில் வேறு ஒன்றை நாடிப் போக ஆரம்பித்து விடுகின்றனர்.

உரிய கிரயத்தை செலுத்துவோருக்கு எளிமையான கிறிஸ்தவத்தில் அநேக பிரதிபலன்கள் காணக்கிடக்கின்றன. அந்தக் கிரயம், விசுவாசம், கீழ்படிதல், ஊழியம், அவற்றை சார்ந்திருந்தல், மற்றும் உண்மையாயிருத்தால் ஆகியவற்றில் இருந்துதான் இந்த கிரயம் வருகிறது. இருதயப் பூர்வமாய் ஏற்றுக்கொள்ளப் பட்டோருக்கு, மேலும் மேலுமாக மாம்ச மற்றும் சரீரப் பிரகாரமான ஆசீர்வாதங்கள் வந்துக்கொண்டே இருக்கிறது. அது உங்களுக்கு அப்படிச் செய்யும்.

1. கிறிஸ்தவம் உங்களுடைய கடந்த கால பாவத்திலிருந்து உங்களுக்கு இரட்சிப்பைக் கொண்டுவருகிறது. அவருக்கு கீழ்படிகிற யாவருக்கும் நித்திய இரட்சிப்பைக் கொடுக்கதக்க காரணராக கிறிஸ்து அவர்களின்

வாழ்க்கையில் மாறுகிறார். (எபி.5:9).அவர் சொன்னார், " விசுவாசமுள்ளவனாகி, ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்" (மாற்கு 16:16). மனிதன் பாவியாயிருக்கிறான், அவனுக்கு பாவ மன்னிப்புத்தேவை. இப்படியாக மனிதனின் மிகப்பெரிய பொக்கிஷமான ஆத்துமாவை சுத்திகரித்து, பரிசுத்தமாக்குவதற்கு கிறிஸ்துவால் மட்டும் சாத்தியமாகும். (லூக்கா 19:10; மத்.16:26)

2. கிறிஸ்தவம் தேவனின் அநேக வாக்குத்தத்தங்களுடன் நம்மைத் தொடர்பு படுத்துகிறது. அங்கே தான் நமக்கு ஆவியின் வரம் கிடைக்கிறது. (அப்.2:38) சபையில் சேர்க்கிறது. (அப். 2:47), கர்த்தரின் பிரசன்னத்தை உணருகிறோம். (மத்.28:29). ஜெபிக்கும் சிலாக்கியம் கிடைக்கிறது. (யோவான். 9:31), மற்றும் நித்திய ஜீவனுக்குரிய வாக்குத்தத்தம் நமக்கு கிடைக்கிறது. (யோவா. 14:1-3)

3. கிறிஸ்தவம் ஆவிக்குரிய மற்றும் ஆசீர்வாதங்களைத் தருகிறது. ஆகையால் "முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவரது நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்கு கூடக் கொடுக்கப்படும்." (மத்.5:33)தேவனுடைய இராஜ்யமாகிய சபையை, முதலாவதாகத் தேடும் போதுதான் இவைகள் கூடக் கொடுக்கப்படும் என்பதைக் கவனிக்க வேண்டும். அடிக்கடி கிறிஸ்தவர்கள் தாங்கள் மிகச்சிறிய அளவே கர்த்தருக்கு செய்வதை நிதானித்து பாராமல், தாங்கள் ஏன் ஆசீர்வதிக்கப்படவில்லை என்பதையே நினைக்கின்றனர். மத்.5-ம் அதிகாரத்தை வாசிக்கவும்.

4. நன்மையானவைகளைச் செய்வதற்கு கிறிஸ்தவம் சந்தர்ப்பங்களை அளிக்கிறது. " ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியாக கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்".(கலா.6:2) ஆகையால் நமக்கு கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாசக் குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்யக்கடவோம்". (கலா.6:10)

5. எவ்வளவுக்கதிகமாய்க் கொடுக்கிறோமோ அவ்வளவுக்கதிமாய் பெறுவோம் என்பதை கிறிஸ்தவம் போதிக்கிறது. பவுல் கொரிந்து சகோதரர்களுக்கு அறிவுரை கூறும் போது, "பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில், சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்," (2.கொரி.9: 6), என்று கூறினார். மேலும் "... மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்" (கலா.6:7) என்றார். அநேகர் அதிகமாய்க் கர்த்தருக்கு கொடுப்பதில்லை, ஆதலால் பெற்றுக் கொள்ளுவதுமில்லை, இருந்தும் ஏன் தனக்கு கிடைப்பதில்லை என்பது குறித்து ஆச்சரியப்படுகின்றனர்.

6. வாங்குவதைப் பார்க்கிலும் கொடுப்பதே பாக்கியமென்று கிறிஸ்தவம் அறிவிக்கிறது. இதைக் கிறிஸ்துவே கூறியிருக்கிறார். (அப். 20:35). மேலும் அவர், "தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்து போவான்; என்னிமித்தம் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் காப்பான்" என்றார் (மத்.10:39)

7. இம்மையிலிருந்து மறுமைக்கு வழிகாட்டுகிறது கிறிஸ்தவம். மனுஷர் உங்களுக்கு எப்படிச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். (லூக்கா 6:31) என்று இயேசு போதிக்கிறார். மனுஷன் தன் சத்துருவை சிநேகிக்க வேண்டுமென்றும் அவர் சொல்லுகிறார். (மத்.5:44)தன்னைபோல ஒருவன் பிறனையும் நேசிக்க வேண்டும், (மத். 22:39). கிறிஸ்தவன் உலகத்தில் அன்புகூரக் கூடாது (1.யோவா 5:8),தன்னை பரிசுத்தமாய் காத்துக்கொள்ளவேண்டும் (மத்.5:8), தேவனுக்கு தன்னை ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும். (ரோமர் 12:1) இதன் இறுதி விளைவு சமாதானமும், சந்தோஷமும், நல் ஜீவயமும், நித்திய ஜீவனுமாகும். (கொலே.1:5). இதற்கு மேலாக ஒருவன் எதைக் கேட்கக்கூடும்.

எனவே கிறிஸ்தவம் என்பது மிகுந்த பிரதிபலன்களை அளிப்பது, ஆனால் எப்படி ஒருவன் அதற்குள் இருக்கிறானோ அதற்கேற்ப அவன் பெறுவான். அதற்குள் எதையும் இடாமல், அதிகமாய் எதையும் அதிலிருந்து எதிர்பாரதிருங்கள். ஆனால் உங்களையே தேவனுக்கு கொடுத்து உங்கள் ஜீவியத்தில் உபதேசம் கிரியை செய்தால், கற்பனைக் கெட்டாத வகையில் நீங்கள் ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.

**J.C.CHOATE** **J.C.சோட்**

## கிறிஸ்துவாகிய கல்

மத். 16:18

1. ஜீவனுள்ள கல். 1.பேதுரு 2:4,5
2. இடறுகிறதற்கான கல். ரோமர் 9:32,33
3. நசுக்கிப்போடும் கல். மத். 21:44
4. விலையேறப்பெற்ற மூலைக்கல். 1.பேதுரு 2:6,7
5. கைகளால் பெயர்கப்படாத கல். தானி. 2:34,35

ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்!

# வேனிற்கால வேதாகம முகாம்

*மற்றும்*

## திருமறை ஆசான் வாசகர் கருத்தரங்கம்

இடம் : YMCA வளாகம், ஏலகிரி மலை (வேலூர் மாவட்டம்)
(ஜோலார்பேட்டை இரயில்வே ஜங்கஷனிலிருந்து சுமார் 25 கீ.மீ.
திருப்பத்தூர் பஸ் நிலையத்திலிருந்து சுமார் 30 கி.மீ)

**நாள் : மே மாதம் : 1 to 4, 2002**
**புதன்மாலை 5 மணி முதல் சனி காலை 11மணி வரை**

**சிறப்பம்சங்கள்**

- கோடையின் கொடுமையிலிருந்தும், வழக்கமான வாழ்க்கை முறையிலிருந்தும் விடுப்பட்டு, தேவ சமூகத்தில் காத்திருக்க அருமையான சந்தர்ப்பம்.
- தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகை தரும் தேவதாசர்கள்
- ஆன்மீக வளர்ச்சிக்கு வழிகோலும் தேவச் செய்திகள்
- கோடை வாசஸ்தலம் - சமச்சீரான தட்பவெப்பம்
- குடும்பத்துடன் தங்குவதற்கு ஏற்ற சூழ்நிலை
- பெண்களுக்கு தனி இட வசதி உண்டு.

உணவும் தங்குமிடமும் உட்பட பதிவுக்கட்டணம்
பெரியவர்களுக்கு ரூ.100/-
சிறியவர்களுக்கு ரூ.50/-

தொடர்பு முகவரி : கிறிஸ்துவின் சபை
195, தாரபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
Ph : 04257 - 30030,30382. e-mail : Kangayam cofc@ eth.net

குறிப்பு : 1. சுமார் 400 பேர் மாத்திரம் தங்க இட வசதி உண்டு. ஆகவே பணம் M.O. செய்து முன்பதிவு செய்து கொள்ளுங்கள்.
2. முகாமிற்கு வருகிறவர்கள் தவறாமல் பைபிள், தட்டு, டம்ளர், படுக்கை விரிப்பு கொண்டு வரவேண்டும்.

# "ஓ, எனக்கு அதற்கு நேரமில்லை"

நான் உங்களுக்கு ஒரு சிறிய கதை சொல்லுகிறேன்.

அனிதா என்ற பெண் சோம்பேறி அல்ல. யாரும் அவளை அப்படிச் சொல்ல முடியாது. சுத்தத்தில் அவளுக்கு நிகர் அவளே என்றுசொல்லலாம். அவளுடைய காலணிகளும், பர்சும் எப்போதுமே ஒன்றுக்கொன்று பொருத்தமாக இருக்கும். அவள் அணிந்து கொள்ளும் உடையில் எந்தவொரு சுருக்கமும் இல்லாமல் இருக்கும். அவளுடைய குடும்பத்தினரும் அவள் பாணியையே பிரதிபலிப்பார்கள். தன்னுடைய காரை மிக அழகான தோற்றத்துடன் வைத்திருப்பதற்கு எவ்வளவு தேவைப்பட்டாலும் அவ்வளவையும் அதற்காக செலவு செய்து, அதைப் பற்றி மகிழ்ந்திருப்பாள்.

அவளுடைய வீடு! அது ஒரு *"அழகான வீட்டின்"* கதையாகும். எந்தவொரு பொருளும் பழைமையடைவதற்கோ அல்லது நாள்பட்டதாகவோ இருக்க அவள் அனுமதிக்கமாட்டாள். மின்னிக்கொண்டிருக்கும் மேசை, நாற்காலிகளில் ஒரு புழுதியும் அண்டி அதன் மேனியை குறைக்க விடமாட்டாள். மிக உன்னிப்பாக பொருள்களை சுத்தம் செய்து, இந்த வருடம், அடுத்த வருடம், அதற்கடுத்த வருடம் என்று தன் வீட்டில் உள்ள அறைகளை சுத்தம் செய்வதில் மகிழ்ந்து போயிருப்பாள்.

அவளுடைய தோட்டம்! களைகள் வளர்வதற்கே பயப்படும். அவைகள் வளருவதற்கு நேரமும் இல்லை, ஏனென்றால் அனிதா ஒவ்வொரு நாள் காலையிலும் சில மணித்துளிகள், அந்தச் செடிகளை கவனித்து, இவளையும் மீறி துணிச்சலாக வளரும் களைகளை களைந்து விடுவாள். கோடை காலம் என்று வரும்போது அவளுக்கு ஒரு பெரிய தோட்டமே அமைந்து விடும். அவள் விதைகளை விதைத்து, மண்வெட்டியால் மண்ணை கிளறி, அதற்கு மருந்து போட்டு, உறைய வைத்து, பாதுகாத்து தன்னை ஒரு புனிதத்தன்மையுள்ள எறும்புபோல் உணரும் வரை வேலை செய்து கொண்டேயிருப்பாள். வசந்த காலத்தில் தன் குடும்பம் எதற்குமே தேவையில்லாத அளவுக்கு தானே எல்லாவற்றையும் சேர்த்து வைத்து விடுவாள்.

கட்டாயமாக இதே கவனமும், ஒரு முழுமையும், அவள் ஒரு தாய் என்ற ஸ்தானத்திலும் காணப்படும். ஒவ்வொரு குழந்தையும் தான் இந்த உலகத்தில் ஒரு முக்கியமான புள்ளி என்பதை உணர்ந்திருக்கும். உணவு வகைகளில் விருப்பமான, விருப்பமில்லாதவைகள், குறிப்பாக துணிகள், அதன் தன்மை, நாகரீகம், விளையாட்டுப் பொருள்கள், பொழுதுபோக்கு போன்ற காரியங்களில் அனிதா ஒன்றுமில்லாதவைகளைக் கூட பெரிதுபடுத்தி அலட்டிக்கொள்வாள். வீட்டிற்கு

ஒரு தாயாகவும், சாரணர் இயக்கத்தின் தலைவியாகவும் இருந்தாள். எந்த வேலையையும் பாக்கி வைக்காமல், தான் 150% தாயாக செயல்படுவதாக நினைத்துக் கொண்டு மிகவும் களைப்போடு, இரவில் தன் படுக்கைக்கு செல்வாள்.

அவள் தன் கணவனை மட்டும் விட்டுவிடுவாளா! ஓ, ஐயா, அவளுக்கு விசேஷமானவராயிருந்தார். அவள் அவருக்காகவே வாழ்வதை அவன் உணரும்படியாக செய்தாள். அவளுடைய எல்லா தேவைகளிலும் கவனம் செலுத்தி, அவனுடைய மனநிலைக்கேற்ப நடந்து கொள்வாள். மனைவி என்ற முறையில் அவள் யாருக்கும் சளைத்தவள் அல்ல.

ஆனால் அவள் தன் குடும்பத்தில் ஒரு அடிமையைப் போல் இருந்ததில்லை. அனிதா தனக்கு மகிழ்ச்சி தரும் காரியங்களை தேர்ந்தெடுத்து, அதில் பல வகைகளிலம் தன்னுடைய திறமைகளை வளர்த்துக் கொள்வாள். வண்ணம் தீட்டுதல் போன்றவற்றை கற்றுக்கொண்டு அதற்கென்று நேரத்தை ஒதுக்கி அதன் மூலம் சிறிய வகையில் வேலை செய்வாள். ஓவியத்திலும் தன் பார்வையை செலுத்துவாள். அத்தோடு தையல் நுணுக்கம், மென்மையான சிற்பங்கள் செய்தல், ஒப்பனை உடையை தயாரித்தல், மரத்தால் செய்யப்பட்ட கைவினைப் பொருட்களை அடுக்குதல் போன்றவற்றால் ஏற்கனவே அழகாக இருக்கும் தன் வீட்டை மேலும் அழகுறச் செய்வாள். அவளால் செய்யப்பட்ட அத்தனை பொருட்களும் அவ்வளவு பயனுள்ள வேடிக்கையாகவும், அவள் முயற்சியின் பலனாக கிடைத்த புதிய பொருட்கள். உண்மையாகவே ஆச்சரியத்தை தரக்கூடியதாகவே இருக்கும். அவைகள் அவளுடைய வீட்டை ஒரு பார்வையுள்ள தாகவும், பராமரிப்பு பெற்றதாகவும் வைக்கும். தன் பிள்ளைகளுக்கு அன்புள்ளம் கொண்ட தாயாகவும் அவள் இருக்கிறாள். ஆ! வாழ்க்கையானது எவ்வளவு நிறைவானதாக்வும் எவ்வளவு நல்லதாகவும் இருக்கிறது.

ஆமாம்..... நல்ல வாழ்க்கை.....

பல நல்ல கிறிஸ்தவர்கள் இதைப்போலவே வாழ்ந்து வருகிறார்கள். தங்கள் சிறிய குடும்பத்தோடு அழகான ஆடைகளை அணிந்து கொண்டு ஆராதனைக்குச் செல்வதில் விருப்பம் கொள்கின்றனர்.

ஆனால் வேத பாட வகுப்பில் போய் கற்றுத்தருவது? "ஓ, எனக்கு அதற்கு நேரமில்லை..." கிறிஸ்தவரல்லாதவரோடு சேர்ந்து வீட்டில் வேதபாட வகுப்பிற்கு ஆயத்தப்படுத்துவது? "ஓ , எனக்கு அதற்கு நேரமில்லை..."

அந்த அழகான வீட்டை விருந்தோம்பல் செய்வதற்கும், தேவனுக்கென்று கனி கொடுப்பதற்கும் பயன்படுத்துவது?"ஓ, எனக்கு அதற்கு நேரமில்லை..."

சமுதாயத்தில் உள்ள கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களோடு சேர்ந்து, அவர்களுடைய பிரச்சனைகள், அவர்களுக்கு ஆவிக்குரிய, உணர்வுப்பூர்வமான

சரீரப்பிரகாரமான ஆலோசனைகள், பொருளாதார உதவிகள் போன்றவற்றை செய்வது? " ஓ - எனக்கு அதற்கு நேரமில்லை.

வியாதிப்பட்டவர்களையும், விசுவாசத்தில் பெலவீனரையும் போய் சந்தித்து, எந்த வகையிலும் அவர்களுக்கு உதவி செய்ய எதிர்பார்த்திருப்பது? " ஓ, எனக்கு அதற்கு நேரமில்லை...."

வேதாகம அஞ்சல் வேலையில் உதவி செய்வது? ஓ, எனக்கு அதற்கு நேரமில்லை"

அக்கம்பக்கத்தில் உள்ளவர்களுக்கும், உலகத்தில் உள்ள அனைவருக்கும் சுவிசேஷத்தைகூறும் வேலையில் தன்னை ஈடுபடுத்திக்கொள்வது? ஓ, எனக்கு அதற்கு நேரமில்லை.

நாம் வாழும் இந்த உலகிலே நாம் உட்கார்ந்து நம்மை நாமே சோதித்து, கணக்கெடுத்துப்பார்ப்பது அவசியம். ஒருவேளை, நாம் வசிப்பதற்காக சில சட்டங்களை வைத்துக்கொண்டு கிறிஸ்தவர்களுக்கு உண்டான பொறுப்புகளைப் பற்றி தேவன் என்ன சொல்கிறார் என்பதற்கு முக்கியத்துவம் கொடாமல் இருந்து விடுகிறோம்.

ஒரு நல்ல மனைவியாகவோ, தாயகவோ, வீட்டை பராமரிப்பவளாகவோ அல்லது ஒரு நல்ல கணவனாகவோ, தகப்பனாகவோ, குடும்பத்திற்கு அனைத்தும் வழங்குபவராகவோ இருப்பதில் தவறேதுமில்லை. சொல்லப்போனால் இந்த காரியங்களெல்லாம் நல்லவைகள். இதில் நம்முடைய பொறுப்புகளை நிறைவேற்ற மிகவும் அவசியமாகும். ஆனால் மிகவும் ஆபத்தானது என்னவெனில், இந்த சரீரப்பிரகாரமான நல்ல, சரியான காரியங்களே நாம் உயிரோடு இருப்பதை சாப்பிட்டு விடக்கூடாது. அப்படியிருக்கும் பட்சத்தில், நாம் கிறிஸ்தவர்களாக மாறினபோது உண்மையாகவே எடுத்துக்கொண்ட தீர்மானங்களை நிறைவேற்று வதற்கு நமக்கு நேரம் கிடைக்காமல் போய்விடும். சுறுசுறுப்பாக இருப்பது நல்ல காரியம் என்பதற்காக, தலைக்கு மேல் காரியங்கள் போக விட்டுவிடக்கூடாது. உண்மை என்னவென்றால், நம்மைப்பற்றியும், நமக்காக செலவு செய்யும் நேரத்தைப் பற்றியும் ஒரு குருட்டுதனமான நல்ல எண்ணம் கொண்டு விடுகிறோம். *கிறிஸ்தவம் என்பது முதலாவது, நமக்கு சேவை செய்து கொள்வதற்காக வடிவமைக்கப்பட்ட ஒன்று அல்ல.* கிறிஸ்தவத்தை ஏதோ நமக்கு கிடைத்த ஒரு சொத்து என்று நினைத்து, ஏற்கனவே நிறைவாயிருக்கிற வாழ்க்கையை மீண்டும் பூர்த்தி செய்து கொண்டு வாழ்வோமானால் நாம் அதை தவறாக பயன்படுத்துகிறோம். இயேசுகிறிஸ்து ஒரு மாதிரியை வைத்திருக்கிறார். மனுஷகுமாரன் ஊழியங்கொள்ளும்படிவராமல், ஊழியஞ்செய்ய வந்தார் (மத்.20:28). அவரைப் பின்பற்றுகிற நாமும் இவ்வாறாக அறிவுறுத்தப்படுகிறோம். " .....அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள்" (கலா.5:13)

கிறிஸ்தவன் ஒருவேலையைச் செய்யும் போது அது கட்டாயம் கனிகொடுக்கக் கூடியதாக இருக்கவேண்டும். மத்.3:10 கூறுகிறது "... ஆகையால், நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும்" சத்தியத்தையும் கிறிஸ்துவின் அன்பையும் மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளாமல், மற்றவர்களைப் பற்றிய கரிசனையில்லாமல் இருப்பது, தான் மிகவும் அலுவலாக இருக்கிறேன் என்பதினால் அல்ல. தவறான காரியங்களுக்கு முன்னுரிமை கொடுத்து, தங்களுக்கு நல்லவைகள் என்று கருதும் காரியங்களை செய்துவிட்டு, தேவனுக்கு முன்பாக தவறு செய்கிறவர்களாய் மாறிவிடுவோம்.

இந்த "நல்ல வாழ்க்கை" , நல்ல காரியங்களைச் செய்வதில் மிகவும் சுறுசுறுப்பு, சரியான நல்ல காரியங்களுக்கு முன்னுரிமை அளிக்காமல் இருந்தால், தாலந்துகள், நம்முடைய செல்வாக்கு, பணம் இவைகளெல்லாம் சாத்தானுடைய வல்லமையான ஆயுதங்களாகும். நாம் மிகவும் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். நாம ஏற்றுக்கொள்ள வேண்டிய விஷயம் என்னவெனில் நமக்கு எது முக்கியமாய் தோன்றுகிறதோ அதையே செய்ய நம்மை உட்படுத்தி விடுகிறான். உலகத்தின் பால் ஏற்படும் அதிக விபரம் கூட இதற்கு காரணமாக இருக்கலாம்.

இதை வாசிக்கும் எனதன்பு சகோதரிகளே! அனிதாவின் கதை நமக்கு பாடம் கற்பித்திருக்கும் என்று நம்புகிறேன். நான், என் வீடு, என் பிள்ளைகள், என் கணவர் என்று ஓயாமல் அதே சிந்தனையோடு செயல்படாமல், கர்த்தருடைய காரியங்கள், விசேஷமாக சபைக்கடுத்த காரியங்களில் நம்மை ஈடுபடுத்துவது மிகவும் அவசியமானது, நன்மையானது.

நமதாண்டவராகிய இயேசுகிறிஸ்து மலைப்பிரசங்கத்தில், " முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் கூட உங்களுக்குக் கொடுக்கப்படும்". (மத்.6:33). என்று கூறுகிறார். அனிதாவைப் போல்தான், இன்றைக்கும் அநேக சகோதரிகள் வாழ்ந்துக்கொண்டிருக்கிறோம். சபை சம்பந்தமான காரியங்களுக்கு நேரமில்லாமல் போய்விடுகிறது. கிறிஸ்துவின் சாயலை தரித்துக்கொண்டிருக்கும் நாம் அவரைப் போலவே ஊழியம் கொள்ளாமல், ஊழியம் செய்து, அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியம் செய்வோம். நம்முடைய பெரும்பாலான நேரத்தை அவருக்கென்றே செலவு செய்வோம். அப்படிச் செய்ய தேவன் உதவி செய்வாராக!

பெட்டி சோட்

ரேச்சல் நாயகம்.

# நீங்கள் பிழைக்க வேண்டுமானால்!

உரோம சாம்ராஜ்யம் உலகாளும் வேளைதனில், உளையானபாவத்தில் வீழ்ந்தமிழ்ந்ததால் ஆத்துமாவில் உருக்குலைந்து, உள்ளமெல்லாம் உதவிக்காக உருகிநின்ற மனித இனத்தை, உன்னத விண்ணுலகம் சேர்க்க தன்னலம் துறந்தவராய், அவனியில் அவதரித்த ஆத்துமநேசர் இயேசு கிறிஸ்துவின் தேன் மதுர நாமத்தில், பராக்கிரமத்தை மகுடமாக சூடியிருக்கும் வாலிப நெஞ்சங்களுக்கு தித்திக்கும் வாழ்த்துக்கள். பிழைக்க வேண்டிய பருவம் தானே வாலிபம்! பின்னே ஏனிந்த தலைப்பு என்ற மலைப்புடன் சேர்ந்து, எழுத்துப் பிழையேதும் அச்சில் உண்டோ என்ற எண்ணமும் வாலிப உள்ளத்தில் அலைமோதும் என்பதுறுதி. பிழை செய்யும் வாய்ப்பு வலிய வந்து சேரும் பருவம் வாலிபம் என்பதால் ஆத்துமாவிலும், அகிலத்தின் வாழ்க்கையிலும் தேவ தயவோடு பிழைக்க வேண்டும் என்ற நோக்குடன் இத்திங்கள் இம்முயற்சி செய்கிறேன்.

அழகை தன் ஆயுதமாக உபயோகித்து, கவின் மிகு காட்சிகளைக் கண்முன் நிறுத்தி இளைஞர்களை சீறிப்பாய்ந்து சிதறடிக்க வகைதேடும் சாத்தானின் கைகளுக்கு தப்பிப்பிழைக்க வேண்டுமாகையால், தன் மந்தையை சிதைக்கும்படி சினம்கொண்டு வந்த சிங்கத்தை சிதறடித்த தாவீது ராஜாவின் ஆலோசனையை கவனிப்போம், *" கர்த்தரையும் அவர் வல்லமையையும் நாடுங்கள், அவர் சமூகத்தை நித்தமும் தேடுங்கள்"* (சங்.105:4)என்று விளம்புகிறார். நம்மை அழிக்கும்படியாக பகைவனான பிசாசு துரத்தியும் தேடியும் வருவதால், அவனின் கோர பிடியிலிருந்து பிழைக்க நாம் கர்த்தரின் வல்லமையையும், அவரின் சமூகத்தையும் அநுதினமும் தேட வேண்டும் என்ற அறிவுரையை அறிந்த நாம் , அவரை எப்படித் தேட வேண்டும் என்று சற்று சிந்திப்போம் வாரீர்.

## குற்றம் உணர்ந்து தேட வேண்டும்

"குற்றம் " புரிந்தேன் என ஏற்றுக்கொள்ளும் மனம் எல்லோருக்குள்ளும் இருப்பதில்லை. சுயகௌரவம் தடுக்கும், மற்றவர் ஏளனமாக எண்ணிவிடுவார்கள் என்ற எண்ணம் நம்மை வாட்டி வதைக்கும். அதுவும் வலிமை மிகு வாலிபப் பருவத்தில் இவ்வெண்ணங்கள் அதிகமாயிருக்கும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு வாய்ப்பில்லை. மனிதர்களாகிய நாம் இறைவனை அண்டி வாழ்வதால், அவர் இன்றி அணுவும் அசையாது என்பதால், அவர் எதை எதிர்பார்க்கிறார் என்பதை நாம் அறிந்து அதன்படி நடந்துகொள்வது அவசியம். பரலோகத்தின் தேவன், " தன் இருதயத்திற்கு ஏற்றதாசன்" என்றழைத்த தாவீது ராஜாவை இவ்விஷயத்தில் நாம் நோக்கிப்பார்க்கையில், அவனிடம் தவறிழைத்தீர் என்று சுட்டிக்காட்டப்

படுமானால், உடனே தன் தவறை ஒத்துக்கொண்டு, கர்த்தருக்கு **விரோதமாக பாவம் செய்தேன் என்று அறிக்கையிட்டு**, கர்த்தரை மனதுயரத்துடன் தேடுவான். இதனால் தானோ! அவரை தேவன் தன் இருதயத்திற்கு ஏற்ற தாசன் என்றார். வாலிபரே, நாமும் தேவனிடமிருந்து இப்படி பெயரெடுக்க வேண்டுமல்லவா? சிந்திப்பீர்! செயல்படுவீர்!

யானைத்தந்தங்களால் அரியாசனம் செய்து, ஆறுபடிகள் அதற்கு வைத்து, வேங்கைகளை வேலைப்பாடுகளுடன் படிகளின் இரு ஓரத்திலும் பொருத்தி, ஞானமாய் ஆட்சி செய்த சாலொமோனுக்கு பின் இஸ்ரவேல் ராஜ்யம் இரண்டாக பிளவுபட்டது. பத்து கோத்திரம், தன்னை இஸ்ரவேல் என்று அழைத்துக் கொண்டது. இப்பத்துக் கோத்திரமும், குற்றத்தின் மேல் குற்றத்தை ஓயாமல் செய்து கொண்டே இருந்த வேளையில், தேவன் தன் எதிர்பார்ப்பை ஓசியா தீர்க்கன் மூலம் உரைக்கிறார் உன்னிப்பாக கவனிப்போம். "அவர்கள் தங்கள் **குற்றங்களை உணர்ந்து,என் முகத்தை தேடுமட்டும்** நான் என் ஸ்தானத்துக்கு திரும்பிப் போய்விடுவேன்; தங்கள் ஆபத்தில் என்னைக் கருத்தாய்த் தேடுவார்கள்"(ஓசியா 5:15)

வாலிபர்களே! பிழை செய்வது சகஜம், ஆனால் அது உணர்த்தப்பட்டவுடன் உடனே திருந்தி, நமது பாவங்களை தேவனிடத்தில் அறிக்கையிட்டு, மன்னிப்பை நாடி கெஞ்சுவோமானால், நிச்சயம் இரங்குவார். ஞானியின் கூற்றை கவனியுங்கள், "தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான், அவைகளை *அறிக்கை செய்து விட்டு விடுகிறவனோ இரக்கம் பெறுவான்"* (நீதி. 28:13) ஆகவே, வாலிபர்களே நாம் வாழ்வடைய நமது பாவங்களை, குற்றங்களை உணர்ந்து அவரைத் தேடுவோம், இரக்கத்தில் ஐஸ்வரியம் கொண்டவர் நம்மை தன்பட்சமாய் சேர்த்துக் கொள்ளுவார் என்பது திண்ணம்.

## தாழ்மையோடு தேவனை தேடுங்கள்

வாலிபர்களே! பராக்கிரமத்தை நாம் அணிந்திருக்கிறபடியால் எதையும் செய்ய முடியும் என்ற மமதையும், சாமார்த்தியமாய் எக்காரியத்தையும் சாதிக்கலாம் என்ற தைரியமும் நிறைந்திருக்கும் பருவமிது. இந்த நினைவுகள் சில வேளைகளில் நன்மையாக இருந்தாலும், தேவனை எதிர்த்துப் போராடி நம்மால் ஒரு போதும் எந்த வெற்றியையும், பெற இயலாது என்கிற உண்மையை உணர்ந்திடல் வேண்டும். சர்வத்தையும் வாயின் வார்த்தையின் வல்லமையால் சிருஷ்டித்த தேவனுக்கு முன் நாம் வெறும் களிமண் என்பதை மனப்பூர்வமாய் ஏற்று அவரின் அநுகிரத்தினால் நாம் பிழைக்க வேண்டுமாதலால், நம்மை அவர் சந்நிதி முன் தாழ்த்த வேண்டியது மிக அவசியம்.

ஞான முடி சூடி, தென் தேசத்து ராஜஸ்திரியின் விடுகதைகளை எல்லாம் சிரமமின்றி விடுவித்து சிம்மாசனத்தை அறிவால் அலங்கரித்த சாலொமோன் சொன்னதை கவனிப்போம். " தாழ்மைக்கும் கர்த்தருக்குப் பயப்படுத்தலுக்கும் வரும் பலன் ஐசுவரியமும் மகிமையும் ஜீவனுமாம்" (நீதி. 22:4). வாலிபரே, ஜீவன்

என்பது ஏதோ இவ்வுலக பிழைப்பு என்று நினைத்து விடாதீர், அது நம்மை வனைந்தெடுத்த வல்லவரோடு நீடூடிய காலம் நித்தியமாக வாழ்வதேயாகும். தேவ ஆலயத்தை அலங்காரமாய் கட்டி, அந்த பிரதிஷ்டை பண்ணும்போது, சாலொமோன் ஜெபித்தான், அந்த இரவிலே கர்த்தர் அவனுக்கு தரிசனமாகி சொல்வதை கவனிப்போம். " என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களை தாழ்த்தி, ஜெபம் பண்ணி, என் முகத்தை தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து அவர்கள் தேசத்துக்கு ஷேமத்தைக் கொடுப்பேன்". (2.நாளா. 7:14) என்றார்.

ரெகொபெயாம் என்னும் கொற்றவனின் ஐந்தாம் வருஷத்தில் கர்த்தருக்கு விரோதமாய் இஸ்ரவேல் அனைத்தும் துரோகம் செய்ததால், எகிப்தின் ராஜாவாகிய சீஷாக் எருசலேமுக்கு விரோதமாய் வந்தான். ஆபத்து அண்டியவுடன் பிரபுக்களும் அரசனும் " தங்களை தாழ்த்தி கர்த்தர் நீதியுள்ளவர்" என்றார்கள். தேவன் இதைக் கண்டவுடன், " அவர்கள் தங்களைத் தாழ்த்தினார்கள். ஆகையால் அவர்களை அழிக்கமாட்டேன்" (2.நாளா.12:6,7) என்று அவர்களுக்கு கொஞ்சம் சகாயத்தைக் காட்டினார். பிரியமான வாலிபனே, உன் நெஞ்சின் நினைப்புகள் நித்தமும் பொல்லாததாக இருந்தால் ஆபத்து வரும் முன்னே உன் தேவனை நீ தாழ்மையோடு, அவர் தாள் தொழுது தேடு, அவர் உங்களுக்கு நிச்சயம் சகாயம் காட்டுவார், நாம் பிழைக்கும்படி அழிக்காது காத்துக்கொள்வார். இன்றே திரும்பு, அவர் உன்னை வெறுக்காமல் விரும்புவார் என்பதில் சந்தேகமில்லை.

யாழ் இசை மீட்டி, இனிய சங்கீதங்களை பாடிய தாவீது சொல்லுகிறதைப் பாருங்கள் வாலிபரே! "கர்த்தர் உயர்ந்தவராயிருந்தும் தாழ்மையுள்ளவனை நோக்கிப் பார்க்கிறார், மேட்டிமையானவனையோ தூரத்திலிருந்து அறிகிறார்" (138:4) கர்த்தர் தூரத்திலிருக்க வேண்டுமா அல்லது உங்களை அவர் நோக்கிப் பார்க்க அருகில் வரவேண்டுமா என்பதை நீங்களே முடிவு செய்யுங்கள், அவருடைய கோபாக்கினையின் நாளில், கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுவுக்குள் நீங்கள் மறைக்கப்பட, அவரைத் தேடுங்கள்; நீதியைத் தேடுங்கள்; மனத்தாழ்மையைத் தேடுங்கள்; அப்பொழுது ஒருவேளை கர்த்தருடைய நாளிலே மறைக்கப்படுவீர்கள் (செப்.2:3). வாலிபர்களே, நீங்கள் மனந்திரும்பி, இயேசு கிறிஸ்துவை தேவ சுதன் என்று அறிக்கையிட்டு, திருமுழுக்கு பெற்று, கிறிஸ்துவை தரித்துக் கொள்ளுங்கள் அப்பொழுது அவருக்குள் மறைக்கப்படுவீர்கள். (அப். 17:30; 7:37; 22:16 கலா. 3:27). கடைசியாக வாலிபரே கர்த்தர் ஆமோஸ் தீர்க்கனைக் கொண்டு சொல்வதைக் கேளுங்கள், *" என்னைத் தேடுங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள் "* கேட்ட நீங்கள் அவரை தேடி , பிழைப்பீர்கள் என நம்புகிறேன். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

**ஜே. பிக்கின்ஸ்**

# புலம்பல் ஒரு கண்ணோட்டம்

1. காலம் : கி.மு. ஏறக்குறைய கி.மு. 575

2. ஆசிரியர் : எரேமியா தீர்க்கன்

## இந்நூலைப்பற்றி...

1. இந்நூல் யூதா தேசத்தில் மீந்தவர்களுக்கு எழுதப்பட்டது.

2. எருசலேம், பாபிலோனிய ராஜாவாகிய நேபுகாத் நேச்சாரால் அழிக்கப் பட்டது. அதை நினைத்து இப்புலம்பல் புத்தகம் எழுதப்பட்டிருக்கிறது.

3. இந்நூல் பெரிய தீர்க்கதரிசனத்தில், மிகச் சிறிய நூல் என்பது குறிப்பிடத்தக்கது.

4. பாவம் அழிவுக்கு நேராக நம்மைவழிநடத்தும் என்றும், நியாயத்தீர்ப்பு தவிர்க்க முடியாதது என்றும் இந்நூல் நமக்கு சுட்டிக்காட்டுகிறது.

5. தேவனுடைய எல்லா வாக்குத்தத்தமும் நிபந்தனைகளை கொண்டது. நாம் அந்த நிபந்தனைகளை நிறைவேற்ற தவறினால், தேவன் தான் கொடுத்த வாக்குத்தத்தத்தையும் நிறைவேற்ற மாட்டார்.

6. இந்நூலின் இறுதி அதிகாரம் கர்த்தருக்கு நேராக ஏறெடுக்கப்படுகிற ஜெபத்தோடு முடிகிறது. "எங்கள் நாட்கள் புதியவைகளாக்கும்" என்ற விண்ணப்பம் இந்நூலின் இறுதியில் வைக்கப்படுகிறது.

## இந்நூலின் செய்தி...


அ. சத்தியத்தை அறிந்த பின்னும் விசுவாசத்தைவிட்டு விழுவதைவிட துக்ககரமான காரியம் வேறே எதுவுமில்லை.

ஆ. நாம் பாவம் செய்யும் போது தேவன் நமது எதிராளியாக மாறுகிறார்.

இ. யெகோவா தேவன் தயவும், கண்டிப்பும் உள்ளவர்.

# வேதாகமத்தில் சிலந்திகள்

இயேசு கிறிஸ்துவினால் அதிகம் நேசிக்கப்படுகிற என் அன்பு தம்பி! தங்கைகளே! உங்கள் யாவரையும் வாழ்த்துகிறேன். நீங்கள் தொடர்ந்து இப்பகுதியை படித்து பயன் பெற்றுக்கொண்டிருப்பீர்கள் என நம்புகிறேன். இம்மாதம் சிலந்திப் பூச்சிகளிடம் இருந்து சில பாடங்களை கற்றுக் கொள்வோமா? வாருங்கள் என்னோடு.



சில முக்கியமான ஆவிக்குரிய பாடங்களை கற்றுத்தர வேதாகமம் அடிக்கடி செடிகளையோ, பூச்சிகளையோ அல்லது மிருகங்களையோ பயன்படுத்துகிறது என்பது உங்களுக்கு தெரியுமல்லவா? இயேசு ஒருமுறை தமது சீஷர்களைப் பார்த்து, ''ஆடுகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல இதோ, நான் உங்களை அனுப்புகிறேன் ஆகையால், நீங்கள் சர்ப்பங்களைப் போல வினாவுள்ளவர்களும், புறாக்களைப் போல கபடற்றவர்களுமாய் இருங்கள்'' என்று கூறினார். இயேசு தனது சீஷர்கள், எல்லா நேரமும் விரும்பப் படமாட்டார்கள், என்பதால் அவர்கள் சரியாகவும் அறிவுத்திறனோடும் செயல்பட வேண்டும் என்பதை அறிந்துகொள்ள விரும்பினார். நீதிமொழிகளின் ஆசிரியர் (6: 6)ல் நீ எறும்புகளிடத்தில் சென்று அதின் வழிகளைப் பார்த்து ஞானத்தைக் கற்றுக்கொள் என்று அருமையான கருத்தை கூறுகிறார். நாம் அதை இச்சிறுவயதிலிருந்தே செய்யவேண்டும். எதில் எல்லாம் செய்யவேண்டும்? அன்றாட சரீர வாழ்க்கையில் மட்டுமல்ல! ஆவிக்குரிய வாழ்க்கையிலும் எறும்பைப் போல செயல்பட வேண்டும். வேதாகமம் சிலந்திகளையும் ஆவிக்குரிய பாடங்களைக் கற்றுத்தரும்படி உபயோகிக்கிறது.

நீதிமொழிகளிலே நாம் இந்த வசனங்களை வாசிக்கலாம். ''தன் கைகளினாலே வலையைப் பின்னி அரசர் அரமணைகளிலிருக்கிற சிலந்திப் பூச்சியுமே'' (30:38) இதற்கு முன்னால் உள்ள வசனங்களில் ஆசிரியர் எறும்புகளைப் பற்றியும் கூறியுள்ளார். அவர் கூறவரும் கருத்து என்னவென்றால் மேற்சொன்ன பூச்சிகள் அனைத்தும் பெரியதாகவோ அல்லது பலமுள்ளதாகவோ இல்லை? அப்படியென்றால் அவைகள் மிகவும் அறிவாக செயல்பட்டு தங்கள்

தாலந்துகளை முறையே பயன்படுத்துவதால் தான். சிலந்திகள் தங்கள் சிறந்த இருப்பிடமான வலைகளை தங்கள் உடம்பிலிருக்கிற சில திரவியங்களைக் கொண்டு கட்டுகிறது. தனது வலையில் சிக்கும் உணவை தனது சிறு கையினால் பிடித்து உட்கொள்கிறது. சிலந்தி தன் உருவத்தில் சிறியதாயிருந்தாலும் அது மிகவும் பெலமுள்ளதாயும் கூர்ந்த அறிவுடையதாகவும் இருக்கும் . அதன் உருவமும் பிறரை ஏமாற்றக் கூடியதாயிருக்கிறது.

தீர்க்கதரிசியான ஏசாயாவும் சிலந்திகளை கொண்டு முக்கியமான பாடங்களை கற்றுத்தருகிறார். மிகுந்த தீமையான மனிதரை பற்றி பேசும் போது இப்படி பயன்படுத்துகிறார். அவர்களை சுற்றி இருந்த ஜனங்களை தீமையின் வலையில் சிக்கவைக்கும்படியாக வகை தேடினார்கள். ஆனால் அடுத்த வசனத்தில் '' அவைகளின் நெசவுகள் வஸ்திரங்களுக்கேற்றவைகள் அல்ல; தங்கள் கிரியைகளாலே தங்களை மூடிக்கொள்ளமாட்டார்கள்''. வேறுவிதமாய்ச் சொன்னால் சிலந்திகள் எவ்வளவு சிக்கலாக, சிறந்ததாக தன் வலைகளை பின்னினாலும் தேவனிடத்திலிருந்து அது தன்னை மறைத்துக் கொள்ள முடியாது. தேவன் அவைகள் என்ன செய்கிறது என்பதை எப்பொழுதும் அறிந்தவராகவே இருக்கிறார். இதே கருத்தைத்தான் எபிரெய ஆசிரியர் வலியுறுத்துகிறார். '' அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது. அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்'' (4:13) அடுத்த முறை நீங்கள் சிலந்தி பூச்சிகளை பார்க்கும்போது இந்த முக்கிய பாடங்களை நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் சிறுவர்களாக இருந்தாலும், தேவனுக்காக அதிகமான காரியங்களை செய்ய முடியும். நீங்கள் தவறான காரியம் செய்யும்போது அவரிடம் அதை மறைக்க முடியாது. ஏனெனில் அவர் எல்லாவற்றையும் பார்த்தும், அறிந்தும் இருக்கிறார். ஆகவே இந்த சிறு பிராயத்திலேயே அவருடைய வசனத்தின்படி செய்வோம். இந்த கோடை விடுமுறையில் பெற்றோர்களுக்கும், மற்றவர்களுக்கும், கீழ்ப்படிந்திருங்கள். தேவ ஆசீர்வாதத்தை பெறுங்கள்!! அடுத்தமாதம் சந்திப்போமா!

அடுத்த மாதம் நடக்கவிருக்கும் ஏலகிரி முகாமிலே சிறுவர்களுக்கு தனியாகவும் சிறப்பாகவும் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. நீங்கள் அனைவரும் வந்துபயன் பெறுங்கள் என ஊக்கப்படுத்துகிறேன்.



**R.Abel.R. நாயகம்**

# சபை ஏழை எளியவர்களுக்கு தருமம் செய்யும் தேவனுடைய கரம்.

புதிய ஏற்பாட்டுச் சபை இயேசு கிறிஸ்துவினால் ஸ்தாபிக்கப்பட்டது; மத்.16:18-ல் இயேசு, "... இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்" என்று சொன்னார். அவர் அதன் ஸ்தாபகர் மட்டுமல்ல, அவரே அதன் தலையாகவும் இருக்கிறார். அப்போஸ்தலனாகிய பவுல் இதைத் தெளிவாக்கி, "எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படித்தி,.... சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிக்கும் மேலான தலையாகத் தந்தருளினார்" (எபே.1:22,23). அவர் ஸ்தாபகரும், தலையுமாயிருக்கிறபடியினாலே, அவருடைய சபையின் அங்கத்தினர்களின் வாழ்க்கை முறையையும் அவர் நமக்கு முன் மாதிரியைக் காட்டியிருக்கிறார். "இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில் கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப் போனார்". (1.போதுரு 2:21). இப்பாடத்தின் கருத்துக்கள் அடிப்படையில் நாம் கேட்க வேண்டியதாவது; "சரீரத் தேவைகள் உடையோருக்காக நாம் எப்படிப்பட்ட எண்ணம் உள்ளவர்களாயிருக்க வேண்டும் என்பதற்கு இயேசு எப்படிப்பட்ட முன் உதாரணத்தை (மாதிரியை) காட்டியிருக்கிறார்?" மேலும், "தருமக் காரியத்தைக் குறித்து புதிய ஏற்பாட்டில் தமது சபைக்கு என்ன கட்டளையை அல்லது மாதிரிகளை இயேசு கொடுத்திருக்கிறார்?" என்று கேட்க வேண்டும்.

## இயேசு இதில் அக்கரை காட்டினார்

தமது சபையை ஸ்தாபிப்பதற்கு முன்பாகவே இயேசு இரக்கத்தின் மகானாக மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் புத்தகங்களில் விவரிக்கப்படுகிறார். ஜனங்களின் பாவங்களும் ஆத்தும மீட்புமே அவரது தலையாய அக்கரையாக இருந்த போதிலும், ஜனங்களின் சரீரத் தேவைகளையும் கூட, அவர் மனிதர்களுக்குள் இருக்கும்போது அக்கரை காட்டியதை அறியலாம். இதற்காக சிறந்த முன் மாதிரியை தமது நண்பன் லாசரு மரித்தபோது விளங்கப் பண்ணியதை அறியலாம். மரியாள் மற்றும் மார்த்தாளுடைய வீட்டிற்கு சென்றபோது அவர்களும் அவரது நண்பர்களும் கொண்டிருந்த துக்கங்களை கண்டபோது, அவர் "... ஆவியிலே கலங்கி துயரமடைந்து, ... கண்ணீர் விட்டார்... இதோ இவர் அவனை எவ்வளவாய்ச் சிநேகித்தார்" எனவசனம் சொல்லுகிறது (யோவா.11:33-36). இயேசுவைப் போல் நாம் இருக்க வேண்டுமானால், மற்றவர்களின் சரீர தேவைகளைக் குறித்து நாம் அக்கரை உள்ளவர்களாயிருக்க வேண்டும் என்பதற்கு கிறிஸ்துவின் வாழ்க்கையில் ஏராளமான சம்பவங்கள் நமக்கு விளக்கப்படுத்தப்பட்டுள்ளன.

## இயேசு இரக்கப்பட்டார்

இயேசுவின் பராமரிப்பை நாடி அநேகர் அவரிடத்தில் வந்தனர். அவர்களின் பெரிதான தேவையை அறிந்து இயேசு மனதுருகினார். "அவர் திரளான ஜனங்களைக் கண்டபோது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போலத் தொய்ந்து போனவர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடியால், அவர்கள் மேல் மனதுருகி", (மத்.9:36) ஜனங்கள் பசியாயிருந்த போது அவர் அவர்களுக்காக மிகவும் அக்கரை காட்டினார்; "ஜனங்களுக்காகப் பரிதபிக்கிறேன், இவர்கள் இப்பொழுது என்னிடத்தில் தங்கியிருந்த மூன்றுநாளாய்ச் சாப்பிட ஒன்றுமில்லாதிருக்கிறார்கள்" (மாற்கு 8:2) என்கிறார்.

## மற்றவர்களுக்காக அக்கரை காட்டும்படி இயேசு போதித்தார்.

மற்றவர்களுக்காக அக்கரை காட்டியதோடு, நாமும் அக்கரை காட்டும்படி போதிக்கவும் செய்தார். நாம் நன்கு அறிந்திருக்கிற நல்ல சமாரியன் கதை இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு (லூக்கா 10:25-37) உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு பெலத்தோடும் அன்பு கூறுவாயாக என்று முதலாம் கற்பனையாகவும், அதற்கு ஒப்பனையான இரண்டாம் கற்பனையாக உன்னிடத்தில் அன்பு கூறுவது போல பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக என்பதையும் இயேசு வலியுறுத்தினார். அப்பொழுது கூட்டத்தில் இருந்த ஒருவன், "எனக்கு பிறன் யார்?" என்று கேட்டான். அப்பொழுதுதான் இயேசு நல்ல சமாரியன் கதையைச் சொன்னார். தனது நேரத்தையும் சக்தியையும், பணத்தையும் முன்பின் அறியாத ஒருவனுக்கு ஒருவன் செய்வதை அடிப்படையாகக் கொண்டதுதான் இக்கதையின் சாரம்சமாகும். அந்த உதவிபெற்ற அந்நியன் மிகவும் அடிபட்டு, கொள்ளையர்களால் கொள்ளையிடப்பட்டு, மருத்துவ சிகிச்சை உணவு, மற்றும் தங்குமிடம் ஆகியவற்றின் தேவையிலே அவன் இருந்தான். சமாரியன் அவனுக்கு இவைகளை கொடுத்து, உதவியதன் மூலம் அவனது இரக்க குணத்திற்கான புகழ்ச்சியை அவன் பெற்றான். கூட்டத்திலிருந்து கேள்விகேட்ட நபருக்கு இயேசு இக்கதையைச் சொல்லி, "நீயும் போய் அப்படியே செய்" என்று கூறினார்.

மற்றவர்களுக்கு உதவிசெய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தி இயேசு போதித்த மனதைக் கவரச் செய்யும் பாடம் இறுதி நியாயத்தீர்ப்பு நாளிலே நடக்கும் நிகழ்ச்சியைக் குறித்த ஒரு காட்சியாகும்.

"அன்றியும் மனுஷக் குமாரன் தமது மகிமை பொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார். அப்பொழுது சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப் படுவார்கள். மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடு களையும் வெவ்வேறாக பிரிக்கிறது போல அவர்களைப் பிரித்து, செம்மறியாடுகளைத் தமது

வலது பக்கத்திலும், வெள்ளாடுகளை தமது இடது பக்கத்திலும் நிறுத்துவார். அப்பொழுது ராஜா தமது வலது பக்கத்தில் நிற்பவர்களை பார்த்து; வாருங்கள் என்பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள். பசியாயிருந்தேன், எனக்குப் போஜனம் கொடுத்தீர்கள்; தாகமாயிருந்தேன், என் தாகத்தை தீர்த்தீர்கள்; அந்நியனாயிருந்தேன் என்னை சேர்த்து கொண்டீர்கள்; வஸ்திரமில்லாதிருந்தேன்; எனக்கு வஸ்திரங் கொடுத்தீர்கள்; வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள்; காவலிலிருந் தேன், என்னைப் பார்க்க வந்தீர்கள்; என்பார். அப்பொழுது, நீதிமான்கள் அவருக்கு பிரதியுத்திரமாக; ஆண்டவரே, நாங்கள் எப்பொழுது உம்மை பசியுள்ளவராக கண்டு உமக்கு போஜனங் கொடுத்தோம்; எப்பொழுது உம்மை தாகமுள்ளவராக க் கண்டு உம்முடைய தாகத்தைத் தீர்த்தோம்? எப்பொழுது உம்மை அந்நியராகக் கண்டு உம்மை சேர்த்துக் கொண்டோம்? எப்பொழுது உம்மை வஸ்திரமில்லாத வராகக் கண்டு உமக்கு வஸ்திரங் கொடுத்தோம்? எப்பொழுது உம்மை வியாதியுள்ளவராகவும் காவலிலிருக்கிறவராகவும் கண்டு, உம்மிடத்தில் வந்தோம் என்பார்கள். அதற்கு ராஜா பிரதியுத்திரமாக;மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன் என்பார்.

இயேசு தொடர்ந்து மற்றவர்களுக்கு இப்படிப்பட்ட உதவிகளைச் செய்யாதவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், மேற்குறித்த உதவிகளை செய்தவர்கள் நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்று இக்காட்சியை விவரிக்கிறார் (மத். 25:31)

## அந்நியருக்கு உதவுங்கள்

மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு நிகழ்ச்சியிலும், நண்பர்களுக்கும், சகோதரர்களுக்கும் மாத்திரமல்ல, அந்நியர்களுக்கும் உதவி செய்யவேண்டும் என்பதை நாம் கவனித்திருக்கக் கூடும். அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள்..." (எபி.13:1,2)என்பதாகும். அப்போஸ்தலனாகிய பவுலும், அநேக பிராந்திய சபைகளுக்கு எழுதி, "ஆகையால் நமக்கு கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தாருக்கும், நன்மை செய்யக் கடவோம்" என்றெல்லாம் போதித்தார் (கலா.6:10) தேவையுடையவர்களுக்கு உதவும் விஷயத்தில் தமது சொந்த ஜனங்களுக்கு மட்டும் செய்ய பொறுப்பு அளவிடப்பட்டதல்ல.

## எப்படிப்பட்ட ஒழுங்குமுறையைப் பின்பற்றவேண்டும்?

மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்னும் பொறுப்பை கட்டளையாக வசனங்கள் கூறுகிறது என்றாலும், அதை எப்படி செய்ய வேண்டும் என சொல்லுவதில்லை. சுய ஆட்சி முறையில் இயங்கும் பிராந்திய சபையோ

அல்லது தனிநபரோ, எப்படி தேவையுடையோரின் தேவையை சந்திப்பது என்பதை அவர்களுடைய சுய முடிவுக்கு விடப்பட்டுள்ளது. இதற்கான உதாரணங்கள் மிகச் சிலவற்றை மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது. அப்.6-ம் அதிகாரத்தில் சில விதவைகள் கவனிக்கப்படவில்லை என அறிகிறோம். இதற்கு அப்போஸ்தலர் களின் பதிலாக, அநேக மனிதர்களை நியமித்து அந்தத் தேவைகளை கவனித்துக் கொள்ளும்படி நியமித்தனர். இன்று சபைகளில் உதவிக்காரர்களை நியமித்து அவர்களின் பொறுப்புகளில் ஒன்றாக இது விடப்படுகிறது.

1.கொரிந்தியர் 16: 1-3 லும், 2.கொரி.8, 9ம் அதிகாரத்திலும், யூதேயாவிலுள்ள பரிசுத்தவான்களுக்கு உதவி செய்யும் பொருட்டு அநேக பிராந்திய சபைகளில் காணிக்கையை சேகரித்ததற்கான முன்மாதிரியைக் காண்கிறோம். திக்கற்ற பிள்ளைகள் மற்றும் விதவைகளை விசாரித்து பராமரிக்க வேண்டியதன் கடமையை யாக்கோபு கிறிஸ்தவர்களுக்கு எழுதுகிறார். "திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்கிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது" (யாக். 1:27). ஆயினும் ஒருதனி நபரோ, பிராந்திய சபையோ அதை எப்படி செய்ய வேண்டும் என யாக்கோபு கூறவில்லை. ஆதலால் மிகவும் கவனமாக, சூழ்நிலைக்கேற்ப, செயல்பட அவரவர் கையில் ஒப்புக் கொடுக்கப்பட்டுள்ளது.

## இதன் தொலைநோக்குப் பொருள்


சபையும், கிறிஸ்தவர்களும் செய்யவேண்டிய ஊழியத்தின் முக்கிய கடமை ஆத்துமாக்களுக்கு போதித்து இரட்சிப்பில் வழி நடத்துவதே. இதுவே இதன் தலையாயக் காரியம். தருமக் காரியங்களை செய்வதும் இதற்காகத்தான். பசியில் வாடும் ஒரு நபர் வசனத்தை வாசித்து தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்வதென்பது கடினமானது. அதே வேளையில் ஆடை ஆகாரமளிப்பது மட்டும் பொறுப்பல்ல, மாறாக, சுவிசேஷத்தை போதிப்பதுதான். இயேசுவின் சீஷர்கள் இரக்கம் காட்டும் ஜனங்களாக, அவரைப் போலவே இரக்கம் காட்டக்கூடியவர் களாகவே இருக்க வேண்டும். தேவன் சொல்லுகிறபடி, "... தரித்திரரை நினைத்துக் கொள்ள..." வேண்டும் (கலா.2:10)

## சுருங்கச் சொல்லின்...

மற்றவர்களுக்கு உதவிசெய்யும் மனப்பாங்கு பெறுவதற்கு கிறிஸ்துவே முன்மாதிரியாயிருக்கிறார். வாழ்க்கையில் ஏழ்மையில் வாடுவோருக்கு, அன்புகாட்டி இரக்கஞ்செய்ய வேண்டும் என போதித்தார், போதித்தபடி செய்து காட்டினார். நாம் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி அவரது முன்மாதிரியை கைகொள்வோமாகில், நாமும் அவரை போலவே செயல்படவேண்டும்.

சபை கிறிஸ்துவின் சரீரமாகவும், அவரே அதற்குத் தலையுமாயிருக்கிறார். அவரது சரீரத்தில் அங்கங்களாயிருக்கிறபடியால், நமது வாழ்க்கையில் கிறிஸ்துவை நாம் பிரதிபலிக்க வேண்டும் அல்லது, பவுல் அப்போஸ்தலன் சொன்னது போல, "... ஜீவனாகிலும்,சாவினாலாகிலும்,கிறிஸ்துஎன்சரீரத்தினாலே மகிமைப்படுவா ரென்று எனக்கு நம்பிக்கை உண்டாயிருக்கிற (து) ...கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்" என்றும், " ... இனிநானல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" என்றும் சொல்லவேண்டும் (பிலி.1:20,21; கலா.2:20) .

பசியுள்ளோருக்கு உணவளித்து, தேவையுடையோரை உடுத்துவித்து, திக்கற்றவர்களையும் விதவைகளையும் விசாரித்து, அன்புகாட்டும் ஒழுங்கு மறையைக் குறித்த தகவல்மிகக் குறைவேயாகும். நாம் செய்ய வேண்டும் என்றும் மட்டும் கூறப்படுகிறோம். எனவே தேவனின் ஏற்பாட்டுப்படி, அந்தந்த பிராந்திய சபையின் தீர்மானத்திற்கே விடப்படுகிறது. ஆகிலும் நாம் எதைச் செய்தாலும் சபையின் குறிக்கோளாகிய ஆத்தும ஆதாயத்திற்காகவே செய்ய வேண்டும். இப்படியாக சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, சபையின் அங்கத்தி னர்களின் வளர்ச்சியில் உதவி செய்து, கிறிஸ்துவுக்கு ஒப்பான வளர்ச்சியை அடைவது அவசியம்.

## மற்றுமொரு வாய்ப்பு

ஆத்தும ஆதாய பிரசங்கங்கள் (சுமார் 220 பக்கங்கள்) மற்றும் நீங்கள் இருக்குமிடத்தில்கிறிஸ்துவின் சபையை ஆரம்பிப்பது எப்படி? (சுமார் 130 பக்கங்கள் ) ஆகிய நூல்கள், தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேத்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, உங்களுடைய உபயோக த்திற்கு ஆயத்தமாக உள்ளது.

பிரசங்கிகளுக்கு, வேத ஆசிரியர்களுக்கும், வேத மாணவர்களுக் கும், சபை அங்கத்தினர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று.

புத்தகம் முற்றிலும் இலவசம், ஆனால், தபால் செலவு உங்களைச் சார்ந்தது.அனுப்பப்படும் தொகை அளவுக்கு புத்தகங்கள் அனுப்பப் படும். அனுப்ப வேண்டிய குறைந்த பட்ச தொகை ரூ. 30/-

தொடர்பு முகவரி

**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**
தபால் பெட்டி எண் 27,
காங்கயம் - 638 701. இந்தியா

குறிப்பு : M.O. கூப்பனில் உங்கள் முகவரியைத் தெளிவாக எழுதவும்.

# யுத்தம் கர்த்தருடையது

தேவனுடைய ஜனங்களாகிய இஸ்ரவேலர்கள் எகிப்தில் 430 ஆண்டுகள் பார்வோன் அரசனிடம் அடிமைகளாய் இருந்து பயங்கரமான கொடுமை நிறைந்த துன்பங்களை அனுபவித்து வந்தபோது அவர்கள் பரலோகத்தின் தேவனை நோக்கி பாரத்தோடும், கண்ணீரோடும் வேண்டுதல் செய்தார்கள். அவர்களுடைய கூக்குரல் தேவனுடைய சமூகத்திற்குச் சென்றது. தேவன் அவர்களுடைய கூக்குரலை கேட்டார். தேவன் தம்முடைய பிள்ளைகளை எகிப்திலிந்து விடுதலையாக்கி அவர்களை வழிநடத்த சீனாய் மலையில் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த மோசேயை அழைத்து எகிப்துக்கு அனுப்பினார். தேவன் உரைத்தப்படி பார்வோனிடம் பேசி தேவனுக்கு ஜனங்களை அனுப்பும் படிகேட்டார். பார்வோன் அவர்களை அனுப்ப மறுத்ததினால் தேவன் எகிப்திலே மோசேயின் மூலம் பனிரெண்டு கடுமையான வாதைகளை உண்டாக்கிய பிறகு பார்வோன் தேவனுடைய ஜனங்களை அனுப்பினான்.

அவர்கள் எகிப்திலிருந்து விடுதலையாகி சிவந்த சமுத்திரத்தை நெருங்கும் நேரத்தில் பார்வோன் அவர்களை விட மனதில்லாமல் மறுபடியும் அவர்களை எகிப்துக்கு அழைத்துச் செல்ல பின்தொடர்ந்து வருவதை பார்த்த இஸ்ரவேல் மக்கள் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள். அன்றியும் அவர்கள் மோசேயை நோக்கி எகிப்திலே பிரேதக்குழிகள் இல்லையென்று வனாந்தரத்திலே சாகும்படி எங்களைக் கொண்டு வந்தது என்ன? நாங்கள் எகிப்திலே இருக்கும் போது நாங்கள் எகிப்தியருக்கு வேலை செய்ய எங்களை சும்மாவிடும் என்று சொன்னோம் அல்லவா? நாங்கள் வனாந்தரத்திலே சாகிறதைப்பார்க்கிலும் எகிப்தியருக்கு வேலை செய்கிறது எங்களுக்கு நலமாயிருக்குமே என்றார்கள். அப்பொழுது மோசே ஜனங்களை நோக்கி பயப்படாதிருங்கள்,நீங்கள் நின்று கொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்; இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காணமாட்டீர்கள். கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார். நீங்கள் சும்மா இருப்பீர்கள் என்றார். (யாத். 14: 11-14)

எருசலேமின் ராஜாவாகிய அதோனிசேதேக் கிபியோனின் ராஜதானி மக்கள் தங்களைக் காட்டிலும் மிகவும் பலசாலிகள் என்று கேள்விப்பட்டு கிபியோனின் மனுஷர் யோசுவாவுக்கு ஆள் அனுப்பி உமது அடியாரைக் கைவிடாமல், சீக்கிரமாய் எங்களிடத்தில் வந்து எங்களை இரட்சித்து எங்களுக்கு துணை செய்யும் என்று யோசுவாவிடம் வேண்டிக் கொண்டார்கள். உடனே யோசுவாவும் அவனோடே கூட சகல யுத்த மனுஷரையும் சகல பராக்கிரமசாலிகளையும் அழைத்துக் கொண்டு கில்காலிருந்து போனார்கள்.

கர்த்தர் யோசுவாவை நோக்கி, அவர்களுக்கு பயப்படாயாக; உன் கைகளில் அவர்களை ஒப்புக்கொடுத்தேன்; அவர்களில் ஒருவரும் உனக்கு முன்பாக நிற்பதில்லை என்றார். யோசுவா கில்காலிலிருந்து இராமுழுவதும் நடந்து, திடீரென்று அவர்கள் மேல் வந்துவிட்டான். கர்த்தரோ அவர்களை இஸ்ரவேலருக்கு முன்பாக கலங்கப்பண்ணினார். ஆகையால் அவர்களை கிபியோனிலே மகா சங்காரமாக மடங்கடித்து பெத்தொரோனுக்குப் போகிற வழியிலே துரத்தி அசெக்கா மட்டும், மக்கெதா மட்டும் முறியடித்தார்கள்.

அவர்கள் பெத்தோரோனியிலிருந்து இறங்குகிற வழியிலே இஸ்ரவேலுக்கு முன்பாக ஓடிப்போகையில், அசெக்கா மட்டும் ஓடுகிற அவர்கள் மேல் கர்த்தர் வானத்திலிருந்த பெரிய கற்களை விழப்பண்ணினார். அவர்கள் செத்தார்கள். இஸ்ரவேல் புத்திரர் பட்டயத்தால் கொன்றவர்களைப் பார்க்கிலும் கல் மழையினால் செத்தவர்கள் அநேகமாயிருந்தார்கள். கர்த்தர் எமோரியரை இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக ஒப்புக் கொடுக்கிற அந்நாளிலே, யோசுவா கர்த்தரை நோக்கிப் பேசி, பின்பு இஸ்ரவேலின் கண்களுக்கு முன்பாக, சூரியனே நீ கிபியோன் மேலும், சந்திரனே நீ ஆயலோன் பள்ளத்தாக்கின் மேலும், தரித்து நில்லுங்கள் என்றான். அப்பொழுது ஜனங்கள் தங்கள் சத்துருக்களுக்கு நீதியை சரிகட்டும் மட்டும் சூரியன் தரித்தது. சந்திரனும் நின்றது, இது யாசேரின் புஸ்தகத்தில் எழுதியிருக்கவில்லையா. அப்படியே சூரியன் அஸ்தமிக்கத் தீவிரியாமல், ஏறக்குறைய ஒருபகல் முழுவதும் நடுவானத்தில் நின்றது. இப்படிக் கர்த்தர் ஒரு மனிதனுடைய சொல் கேட்ட அந்நாளையொத்த நாள் அதற்கு முன்னுமில்லை. அதற்குப் பின்னுமில்லை; கர்த்தர் இஸ்ரவேலுக்காக யுத்தம் பண்ணினார். (யோசுவா 10:6-14) இதைக்குறித்து சங்கீதக்காரன் சொல்வதைக் கேளுங்கள்.

யார் இந்த மகிமையின் ராஜா? அவர்வல்லமையும் பராக்கிரமமுள்ள கர்த்தர் அவர் யுத்தத்தில் பராக்கிரமமுள்ள கர்த்தராமே. சங்.24:8

தாவீதுக்காகவும் கர்த்தர் யுத்தம் செய்தார், கர்த்தாவே நீர் என் வழக்காளிகளோடே வழக்காடி, என்னோடு யுத்தம் பண்ணுகிறவர்களோடே யுத்தம் பண்ணும். (சங். 35:1)

பெலிஸ்தன் ஆகிய கோலியாத்து சுற்றிப்பார்த்து தாவீதைக் கண்டு அவன் இளைஞனும் சவுந்தரியருபமான சிவந்த மேனியுள்ளவனுமாயிருந்தபடியினால், அவனை அசட்டைப் பண்ணினான். பெலிஸ்தன் தாவீதைப் பார்த்து; நீ தடிகளோடே என்னிடத்தில் வர நான் நாயா என்று சொல்லி அவன் தன் தேவர்களைக் கொண்டு தாவீதை சபித்தான். பின்னும் அந்தப் பெலிஸ்தன் தாவீதைக் பார்த்து. என்னிடத்தில் வா; நான் உன் மாம்சத்தை ஆகாயத்துப் பறவைகளுக்கும் காட்டு மிருகங்களுக்கும் கொடுப்பேன் என்றான்.

அதற்கு தாவீது, பெலிஸ்தனை நோக்கி,நீ பட்டயத்தோடும், ஈட்டியோடும் கேடகத்தோடும் வருகிறாய்;நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய கர்த்தரின் நாமத்திலே உன்னிடத்திலே வருகிறேன். இன்றைய தினம் கர்த்தர் உன்னை என் கையில் ஒப்புக்கொடுப்பார்; நான் உன்னைக் கொன்று, உன் தலையை உன்னை விட்டு வாங்கி பெலிஸ்த ருடைய பாளயத்தின் பிணங்களை இன்றைய தினம் ஆகாயத்து பறவைகளுக்கு பூமியின் காட்டு மிருகங்களுக்கும் கொடுப்பேன்; அதனால் இஸ்ரவேலின் தேவன் ஒருவர் உண்டு என்று பூலோகத்தார் எல்லோரும் அறிந்துகொள்வார்கள். கர்த்தர் பட்டயத்தினாலும் ஈட்டியினாலும் இரட்சிக்கிறவர் அல்ல என்று இந்த ஜனக்கூட்டமெல்லாம் அறிந்துகொள்ளும் யுத்தம் கர்த்தருடையது. அவர் உங்களை எங்கள் கையில் ஒப்புக்கொடுப்பார் என்றான். அப்பொழுது அந்த பெலிஸ்தன் எழும்பி, தாவீதுக்கு எதிராக கிட்டிவருகையில் தாவீது தீவிரமாய் அந்த சேனைக்கும் பெலிஸ்தனுக்கும் எதிராக ஓடி தன் கையை அடைப்பத்திலே போட்டு அதிலிருந்து ஒரு கல்லை எடுத்து, கவணிலே வைத்து சுழற்றி பெலிஸ்தனுடைய நெற்றியிலே பட எறிந்தான். அந்தக் கல் அவன் நெற்றியில் பதிந்ததினால் அவன் தரையிலே முகங்குப்புற விழுந்தான். இவ்விதமாக தாவீது ஒரு கவணினாலும் ஒரு கல்லினாலும் பெலிஸ்தனை மேற்கொண்டு அவனை மடங்கடித்து அவனைக் கொன்று போட்டான். (1. சாமு. 17:42-50)

## கிறிஸ்தவர்களின் (யுத்தம்) போர்:

கிறிஸ்தவர்கள் அனைவரும் சாத்தானோடும் அவன் பிள்ளைகளோடும் யுத்தம் செய்து கொண்டிருப்பான். கிறிஸ்துவின் போர்வீரன் அப்போஸ்தலன் பவுல் கூறுகிறார். நாங்கள் மாம்சத்தில் நடக்கிறவர்களாயிருந்தும் மாம்சத்தின்படி போர் செய்கிறவர்களல்ல. எங்களுடைய போர் ஆயுதங்கள் மாம்சத்துக் கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவ பெலமுள்ளவைகளாயிருக்கிறது. அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும் தேவனை அறிகிற அறிவுக்கும் விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்கு கீழ்படிய சிறைப்படுத்துகிறவர் களாயிருக்கிறோம். (2. கொ.10:3,5)

மாம்சத்துக்கும் ஆவிக்கும் (யுத்தம்) போர் நடக்கிறது என்கிறார் பவுல். ரோம. 7:23 ஆகிலும் என் மனதின் பிரமாணத்திற்கு விரோதமாய் போராடுகிற வேறொரு பிரமாணத்தை என் அவயங்களில் இருக்கக் காண்கிறேன். அது என் அவயங்களில் உண்டாயிருக்கிற என்பாவப் பிரமாணத்துக்கு என்னை சிறையாக்கிக் கொள்கிறது. நீங்கள் செய்ய வேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது. (கலா: 5:17; யாக்: 4: 1,2) உங்களுக் குள்ளே யுத்தங்களும் சண்டைகளும் எதினாலே வருகிறது, உங்கள் அவயங்களில்

போர் செய்கிற இச்சைகளினாலல்லவா? நீங்கள் இச்சித்தும் உங்களுக்கு கிடைக்கவில்லை; நீங்கள் கொலை செய்தும், பொறாமையுள்ளவர்களாயிருந்தும் அடையக்கூடாமற் போகிறீர்கள். நீங்கள் சண்டையும் யுத்தமும் பண்ணியும், நீங்கள் விண்ணப்பம் பண்ணாமலிருக்கிறதினாலே, உங்களுக்கு சித்திக்கிறதில்லை.


பிரியமானவர்களே, அந்நியர்களும் பரதேசிகளுமாயிருக்கிற நீங்கள் ஆத்துமாவுக்கு விரோதமாய் போர் செய்கிற மாம்ச இச்சைகளை விட்டு விலகுங்கள் என்று பேதுரு சொல்லுகிறார். (1.பேதுரு. 2:11)

ஏனெனில் மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும் இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகதிபதிகளோடும் வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்கு போராட்டம் உண்டு. (எபே.6:12; வ.10,11) இந்த போராட்டத்தில் (யுத்தத்தில்) நாம் வெற்றிபெற தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தை தரித்துக்கொள்ள வேண்டும். (எபே.6:14-17). கடைசியாக, என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்பட்டு நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்க திராணியுள்ளவர்களாகும்படி தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் தரித்துக்கொள்வோமானால் யுத்தத்தில் நாம் வெற்றி பெறுவோம். ஏனெனில் யுத்தம் கர்த்தருடையது. நமக்காக கர்த்தர் யுத்தம் செய்கிறவர்.

**யோசுவா செல்வம்**

# இயேசு கிறிஸ்துவைக் குறித்து யோவான் ஸ்நானகனின் சாட்சி

1. தேவனுடைய குமாரன். யோவான் 1:34
2. உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி. யோவான் 1:29,36
3. பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுக்கிறவர். யோவான் 1:33
4. களத்தை நன்றாய் விளக்குகிறவர் லூக்கா 3:17
5. பதரை அக்கினியால் சுட்டெரிக்கிறவர் லூக்கா 3:17
6. எல்லாரிலும் மேலானவர் யோவான் 3:31
7. மணவாளன் யோவான் 3:29



# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 8.45-9.00p.m.<br>9.00-9.15p.m. | Box.3815<br>New Delhi-110049 | Sunny David |
| TELUGU | Sun,Mon,<br>Tue,Thu | 2.00-2.15p.m. | Box.80<br>Kakinada-533001 | Joshua Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45-7.00p.m.<br>5.45-6.00p.m.<br>5.30-5.45p.m. | Box.8405<br>Bangalore-560084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45-4.00p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit College,<br>Trivandrum-695 034 | P.K.Varghese |



**Please write at these address for Bible Correspondence Course, Magazines and Christian Literatures**

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY CHURCH OF CHRIST

Postal Regn. No. TN / WR / ERD / 77 / 2002
Licensed to Post without Prepayment
TN / WR / ERD / 03 / WPP / 2002

Registered News Paper
RNI No. 47661 / 87 - New Delhi

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக்
கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு

## ஓர் இனிய செய்தி

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட,
அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள்
விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம்.
இது 15 பாடங்களைக் கொண்ட

**ஓர் இலவசப் பயிற்சி,**

இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு
**சான்றிதழ் வழங்கப்படும்.**

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி,**
த.பெ.எண்-27, காங்கேயம் - 638 701.
தமிழ்நாடு. இந்தியா

Published by **Church of Christ, Kangayam,**
Printed at Konar Printers, Madurai - 625 012. Editor : **S. Rajanayagam.**